KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞு ஜூன் மீ 7உ [No. 23

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 353

2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 355

3. எதுவேண்டும்—(சிறு கதை)
P. இராமாநுஜன் 357

4. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 3 களம் 1.)
Goldsmith's—"She stoops to Conquer" 360

5. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 7-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 362

6. மதுரைக்கோவை (வரைபொருட் பிரிவு)
S. வையாபுரிப்பிள்ளை, B.A. B.L. 364

7. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(ஹரிஹரிநீயொக்க)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார் B.A. 365

8. வர்த்தமானம் 366

9. சொல்லூடாட்டம் 3. 367

## கலாநிலயம்

### சுய கல்சர் 6.

இதுகாறும் முன்னர் வகுத்துக் காட்டியபடி, மனிதருக்கு இயற்கையாய் அமைந்திருக்கின்ற தருமசிந்தனை தெய்வசிந்தனை பகுத்தறிவு உறவினையுகத்தல் ஆகிய அம்சங்களைப்போன்றே அழகினைமகிழ்வதாம் உணர்வொன்றும் இயற்கையாய்ப் பொருந்தியிருக்கின்றது. இதுதன்னிலையில் ஓர் தனித்தன்மையா யிருப்பதுமல்லாமல், ஏனைய அம்சங்களுக்கும் ஒவ்வோர் விதத்தில் ஆதாரமா யிருப்பதால் இவ் வியற்கையை உணர்ந்து வளர்ப்பதற்குரிய கல்சரில் கருத்துடையரா யிருத்தல் யாவற்றினும் முக்கியமாகும்.

எவ்வயது எந்நிலைமை எத்தொழில் எவ்வறிவு உடையவராயினும், மனித இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவர் இயற்கையிலும் அழகினைக் கண்டக்கால் 'இது அழகுடையது' என்று உணர்ந்துகொள்ளும் சக்தி ஒன்று இருக்கின்றது. இச்சக்தி சிறிதளவேனும் இல்லாதார் எங்குமிலர். சிலர் கலையினது நுட்பத்தில் அழகு காண்பர்; சிலர் ஆடைநிறத்திலும் அரிவையர் முகத்திலுமே காணும் அழகைக் கிரகிக்கக்கூடியவரா யிருப்பர். கருத்தளவே சிலர் அழகினை ஓர்ந்துகொள்ளப் பழகினவர்களா யிருக்கலாம். வேறுசிலர், பொருளொடுசார்த்தியே எழிலினைக் கண்டறியக் கூடியவரா யிருக்கலாம். அழகினால் தூண்டப்பெற்ற உணர்ச்சி மனத்தின்கண் நின்றுபயில்கின்ற காலவளவிலும் ஒருவருக்கொருவர் வேறுபாடு இருக்கலாம். எனினும் நுண்ணிதோ அன்றோ, பெரிதோ சிறிதோ, கருத்தோ பொருளோ, நிற்குமோ அகலுமோ, அழகினை விழையாத மாந்தர் இவ்வுலகில் மருந்திற்குங் காணப்படமாட்டார். தாலாட்டக் கேட்டமரும் குழவி, இவ்வியற்கைத் தூண்டுதலாற்றான் இசையினது அழகிற்கு ஈடுபடுகின்றது. அம்புலியம்மானை அது தன்செஞ்சிறு கரங்களால் வரவழைப்பதும் அழகினது இயற்கை உணர்ச்சியே யன்றி வேறன்று. ஒன்றுமறியாப் பாமரனா யிருப்பவனுடைய புலன்களுக்கும் அழகென்று தோன்றுகின்ற பொருள்கள் சில இருக்கும். இன்னபடி எவ்வெவர் மனத்திலும் அழகின் விதை அமைந்துளது. இவ்விதை வளருமாயின் அதுஉலகனைத்தும் தன் நிழலில் அடக்கிக்கொள்ளவல்ல அளவினதாய் வியாபிக்கும். எல்லோரு மிதனை இதயமுறப் போற்றி வேளாண்மை புரியாதிருப்ப தேனோ! இச் சக்தியின் வளர்ச்சிக்கு ஏற்றபடி இப்பிரபஞ்சம் நல்குதற்குள்ள உதவிக்கோ அலகில்லை என்னு மவ்வுண்மையைமறத்தலாகாது. நிகிலப்பொருள்கள்யாவும் அழகிற்கென்று அமைந்திருக்கின்றனவே யன்றி உபயோகத்திற்காக இருப்பன வாகா. உலகப்பொருள்கள் எண்ணில்பல் கோடி வகைகளில் உணவிற்கும் உடுப்பதற்கும் மற்ற நமது உடலினது வேட்கைகளுக்கும், உதவவல்லன சிற்சிலவே. எஞ்சியவெலாம் எழிலிற் கிருப்பிடமாதலன்றி வேறோர் உபயோகமும் வாய்த்தில. ஆதலின், நமது அழகி னுணர்ச்சிக்கு ஊக்கம் உறுத்துதற்கே இப்பிரபஞ்சம் படைக்கப்பெற்றுளதெனக்கூறலாம். எங்குமயமான தத்துவம் இவ்வெழில். தேமாந் தளிரில் தவழ்கின்றது, அலர்கின்ற மலரின் இதழ்தோறும் அலர்கின்ற தழகு. படரும் பூங்கொடிகளோ டழகும் படர்கின்றது; நிற்கின்ற மரமெல்லாம் அழகின் உருவமே. புல்லிலையின் பைந்நுனி குழவித்தென்றலால் அலையென அசையும்போதும், திண்மரப் பணைக்கிளை

காற்றினிற்கு ஆடும்போதும், அழகும் அவைகளோடு அசைந்தும் ஆடியும் எதிர்நிருத்தனம் புரியவில்லையா. அழகலால் கடல்களுள் கொந்தளித்தெழுவது வேறுதா னுண்டோ! மதியமும் இரவியும் சிவந் துதிப்பது மழகு, செம்மாந்து திரிவதுமழகு, இளைத்துத்தாமிறங்குவது மழகு. வெண்முத்தின் தண்மையுள் அழகு தயங்குகின்றது.மணியின் றுஒளியாய்ப் பீறுவது மழகே. மலையாக ஒருசார் குவிந்திருக்கும், மணலாகமறுசார் பரந்திருக்கும், அருவியெனப் பாயும், ஆறெனவோடும், கடலெனக்கிடக்கும், முகிலெனமேயும், மின்னெனமிளிரும், மழையெனப் பொழியுமவ் வழகு; பலபடப் புகல்வதென்! குவலயம் முழுவது மழகின் கோயில்.கண்ணைத்திறந்தவுடன் இவ்வழகின் பிழம்பு தம்மைஎம்மருங்குஞ்சூழ்ந்திருக்கக்காணுதார் காணுதாரே.இவ்வழகினது அருமை யாதென்று மதித்துச் சொல்லுந் தரமன்று. அதனுன்வரும் அகமகிழ்வின் றுண்மையுந் தூய்மையும்தெய்வத்தன்மைவாய்ந்தன. நம்முடைய மென்மைத்தன்மைக்கும் உத்தம உணர்விற்கும் தோன்றுத்துணையாய் நின்று உதவும் பெருந்தகையாய இவ்வழகை எங்கெங்குங் கண்டு ஆதாத்திஞெடு அஞ்சிலிசெய்ய நினையாதார் இப்புவியிற் பிறந்தென்செய்தார்! இத்துணை யழகிற்கிடையில் இருந்தும்,நிலத்தின்மேல் நில்லாது விசும்பின்கீழ் வாழாது, அவ்வழகிற் கந்தகராய்ப் பொதியறைபுக் குழல்வார்போல் தடுமாறும் மன்பதைத்தொகுதியின் புன்மதியை நினைக்குங்கால் மேலோர்மனம் உளைந்துஉருகும். இயற்கையா யமைந்திருந்த அழகினது உணர்ச்சியை வளர்க்காது வறிதே சிதைவுற விட்டுவிட்டதால் இவ்வுலகத்தினருள் கணக்கில் பலர் தமக்குரியவோர் கரைசெயற்கரிய இன்பத்தையும் உவகையையும் இழந்தவாய்க்கழிகின்றனர். இன்னவாறு கழிவதற்குக் காரணம் அவர், தம் சுயஆராய்ச்சிச் சக்தியைச் செலுத்தித் தம்மைத்தாம் பன்முறை செவ்விதின் சோதித்துக்கொள்ளாமையே ஆகும். அழகுடைய பொருளொன்றைக் கண்டக்கால் இயற்கையாயவோர்இன்ப உணர்வு முதலில் தோன்றுகின்றது. இந்த உணர்வை உறுவிப்பது, பொருளன்று-அதன்பாலுள்ள அழகேயாகும். அழகியபொருள்களைக் காண்பதால் நம் மனதில் உண்டாகும் இன்ப உணர்வையும், அதன் தன்மை அளவு முதலியவற்றையும், அவ்வுணர்வுபற்றி நிகழ்கின்ற வேட்கையையும், அவ்வேட்கைக்கிணங்க நம்மால் நிகழ்த்தப்பெறும் தொழில்களையும், இவைகளோடு தொடர்புடைய யாவற்றையும், பற்பல விதங்களில் வகுத்தும் தொகுத்தும் பற்பல செவ்விகளில் செவ்விதின் நுனித்து ஆராய்வோமாயின், நம்வயின் எழுகின்றஇன்பத்திற்கு ஆதாரமாயிருப்பது பொருளன்றி அதன்கண் ணுள்ள தத்துவமாம் அழகேஎன்னும் உண்மை புலப்படும். ஆராய்ச்சி யில்லாதாரிதனை யறிதல்அருமை. அறியாதவரையில் அப்பொருள்கள் தாம் தம்மைவயப்படுத்திக்கொள்கின்றன என்று மயங்கியிருப்பவராவார். ஆயின், சிந்தனையெல்லாம் அப்பொருளூடு பாய, அப்பொருள் மீண்டுவந்து இவர்சிந்தனையை இறுகக் கவ்விக்கொள்கின்றது. இதனிடையில், பொருளே தலையிடம்பெற்றுவிட்டதால், அதன்பால் இருந்த அழகினது காட்சியைஇனி இவர்காணமாட்டாதவராகி, அப்பொருள்களைத் தம்முடைமையாக்கிக் காக்க முயல்வதும், அம் முயற்சியில் ஒருவரோடொருவர் இகல்வதுமாய் முடிகின்றனர். அழகினது மாட்சியைக் காட்சிகொள்ளும் இயற்கை உரிமையினைவிற்றுப் பொருளின்உடைமைக்குத் தம்மை அடிமை செய்துகொள்வதே ஆராய்ச்சியில்லாத மாந்தர் தொழிலாகின்றது.

இப்படிப்புகழ்ந்துகூறப்படும் அழகுஎன்னும்அது யாது, என்று கேட்பீராயின், அதற்குத் தக்க விடை அறிவின்மிக்கசான்றவர்களிற்சான்றோரு மிதுகாறும் பகர்ந்திலர். அழகெனும் அத் தத்துவம் ஒன்று உளதென்னு முண்மைக்கு ஐயமில்லையாதலால், அதுதானின்னதென்றுஅறுதியிட்டுக் காட்டவேண்டிய அவசியமுமில்லை.ஆதலின் ஒன்றிங்குக் கூறுமிது போதும். நமக்குப் புறத்ததாய சிருஷ்டியி னழகு, நம் அகத்தினுள்ள ஆன்மாவின்மாண்பினோடு நெருங்கிப்பிணைந்ததோர் உறவினை யுடையதாகும். சிருஷ்டியழகின் ஓர் சின்னமே நமது ஆன்மா என்னலாம்.பொருள்களது ஜடத்வமும், தமோகுணமும், அழிவின் நிச்சயமும், கழுவாத் தன்மையும் நம் கண்களிலிருந்து மறைய மறைய, அதன்பாலுள்ள அழகினது மகிமைதெளியலாகின்றது,அவ்வாறு தெளியும்போது அப்பொருள்கள் நம்மைத்தொடர்ந்து பற்றுமல் ஆதியந்தமில்லாத ஆகாயப்பெருவெளியில் சாச்வதரூபத்தோடுபாய்ந்து பரவிவிடவே நமது ஆன்மாவிற்கு முத்திநிலை பயக்கக் காண்போம். பொருள்களது பற்றை நாம் விட்டுவிடுவதென்னும்சொல்லின் உண்மை யாதென ஆயுங்கால் அந்தத்தில் அது, பொருள்களே நம்மைப் பற்றுமல் விட்டு அகல்வது என்னும் அர்த்தத்தையே இதனுல் தருவது மாகும். அழகின் தத்துவத்தை உள்ளபடி அநுபவிக்கும் பயிற்சியால் பொருள்களின் ஜடத்வம் நம் கண்முன் பிதிர்ந்துபோக, அவைகளை யியக்கிய அழகு அகண்டாகாசத்தில் வியாபிக்கவே, அவ்வழகைத் தொடர்ந்துசெல்லும் நமது ஆன்மாவும் அவ்வாகாசத்தில் அகன்றுபரவி அதனுடன் இரண்டறக் கலந்துவிடுகின்றது.எனின்,பற்றுபவனும் பற்றப்படும் பொருளும் இனி வேறுவேறு இல்லையே. இயற்கைப் பொருள்களில் வைகிய அழகையே நாம் இதுகாறும் உதாரணங்களாக எடுத்து உரைத்துவந்தோமெனினும், முன்கூறியவை அத்தனையும் மனிதனது செய்கையாகத்தோன்றுகின்ற கலைகளின் அழகிற்கும்ஒக்கும். எல்லாக்கலைகளும் ஒரு அழகின் தோற்றங்களேயாயினும், இலக்கியக்கலையில் அவ்வழகு தன்முழுச்சிறப்போடும் விளங்குகின்றது. காவியங்களின் கதைகள் அழகிற்குக் களமாக அமையும். ஒருபொருளிலழகு இருக்கின்றது என்று உரைப்பதும், ஒரு கதையில் அழகு இருக்கின்றது என்பதும்ஒரே கருத்துஉடையன. ஒருவிதத்தில் நோக்குங்கால், பொருள்களின் ஜடத்வம் நம் நினைவிலிருந்து அகல அதன்சாரமாகிய அழகே நிகழும்படி பயில்தல்வேண்டும் என்று முன் உரைத்ததற்கு இணங்க, சிறந்த காவியங்களின் கதைகளுக்குரிய ஜடத்வம், தெருண்ட மேலவர் கருத்தில் தங்காமல் அகன்று அதன் சாரமாகிய அழகு ஒன்றே நிலைநிற்கும் என்று கூறலாம்.அழகெனும் இயற்கை உணர்ச்சியைக் கல்சர் செய்துள்ளவருக்கே இந்நுண்ணிய நன்மை வாய்க்கும். அல்லாதார், எத்துணைக் கற்றிருந்தும் கதையைக்கடந்து அழகை அநுபவிக்கும் ஆற்றலுடையவ ராகார்.இஃதுணர்ந்தால், "இராமனும் கிருஷ்ணனும் சிவனும் இது இது செய்தனரே, இவர்களையோ தெய்வமென்[illegible] பிள்ளை[illegible]யும் பிறன்மனையும் விழைந்[illegible]னும், அவனைப[illegible]



மும் புராணங்களும் எங்களுக்குவேண்டா" என்பன போன்ற புடிற்றுரைகளின் சிறப்பின்மையைக் கண்டுகொளல் அருமையாகாது. கலைமகள் அருளுண்டேல் கல்லும்கவிசொல்லும்; இல்லையேல் கவியுமே கல்லெனஉறைதல் முறையாயிற்று.

ஆதலின், பொருள்களின் புறத்துள அழகும், கலைகளின் அகத்துள அழகும், இரண்டும் தத்தம் உண்மைத் தோற்றத்தின் தரிசனத்தைக் கல்சர் செய்துளமாந்தருக்கே அளிக்கும் தன்மையன. ஆராதனைகள் செய்வதால் கடவுளை எய்தலா மென்பர்; அழகினை எய்துதற்கும் அவ்வகை ஆராதனைவேண்டும்.கடவுள் எங்குமுள பொருளேயெனினும் ஆராதனைக் குரியனவாய் விக்கிரகங்களை அமைத்துக்கொள்வதேபோல், அழகினதுஆராதனைநமக்குக்கைவரும்படிமாபெரும் புலமையோர்தம் நூல்கள் அமைந்திருக்கின்றன! அழகிற்கு அஞ்சலிசெய்யும்வண்ணம்தூண்டுகின்ற இயற்கை நம்மோடு பிறந்திருக்கின்றது. அது நமக்குஇணையாய் வளர்ந்துவருவதற்கும் ஏற்ற பயிற்சிகள் செய்ய வேண்டுமென்பது நம்முடைய கல்சரின் ஒருபாகமாதல் வேண்டும். தருமசிந்தனையும் தெய்வசிந்தனையும், இவ்வழகென்னும் உணர்ச்சியின் உருவங்களே என்னும் வாய்மை சுய ஆராய்ச்சி செய்யுங்கால் எளிதில் புலப்படும். மற்று, வடிவமும்நிறமும்ஒலியும்அமைப்பும் ஆதாரமாகப் பெற்றுத் தம் அழகினைப் பொருள்கள் மிழற்றுவதெல்லாம் தருமமும் தெய்வமும் குடிகொண்ட மனச்செவிக்கே இசைந்து கேட்கின்றது. இனி, அழகு வதிந்த மனத்தின் கண்களுக்கே, கண்டனவெலாம் கடவுளின் மோன உருவெளியாகவும், நிகழ்வதெல்லாம் ஈறிலாப் பேரறத்தின் திருநடமாகவும் தோன்றுகின்றன. இதனுல், அழகும் தெய்வமும் தருமமும் ஓரினத்தன வென்னும் மெய்ம்மையைச் செவ்விதின் தேர்ந்துகொள்ளலாம்.

---

# தமிழ்ப்பாடம் 123.

## வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[341-வது பக்கத் தொடர்ச்சி]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

என்று கூறவிற லங்கர் பூபதியும்
யானிருக் கவிகல் விசயனைச்
சென்று சீறியுயிர் கொள்ளவல் லவர்கள்
யாவ ரென்றுநனி செப்புவீர்
கன்றி னுல்விள வெறிந்த கள்வனி
வனின்று தேர்நனி கடாவினு
மன்று போரிடைக் காண லாகுமென
தாடல்வெஞ் சிலையி னுண்மையே 66

துரியோதனன் சொன்னவைகளைத் தொடர்ந்து கர்ணன் தனது பராக்கிரமத்தைப்பற்றிப்பேசுகின்றான்.

#### பதவுரை.

என்றுகூற - மேலே சொல்லியபடி துரியோதனன் கூறவும் (அவனைத் தொடர்ந்து), விறல் - பராக்கிரமசாலியான, அங்கர் பூபதியும்-அங்கதேசத்துத்தலைவனை கர்ணனும், (எழுந்திருந்து) யான் இருக்க-நான் இருக்கையில், சீறி - சீற்றத்தோடு, சென்று - போர் செய்யச் சென்று, இகல் விசயனை- நம்மோடு பகையுடைய அர்ச்சுனனது, உயிர் -உயிரை, கொள்ள-கவர, வல்லவர்கள் - வல்லமையுடையவர்கள், யாவர் - யார் இருக்கின்றார்கள், என்று - என்று, நனி செப்புவீர் - நன்கு கூறினீர்கள்.

கன்றினுல் - கன்றுக்குட்டியைக் கொண்டு, விளவு எறிந்த - முன் விளம்பழம் அடித்த, கள்வன் - திருடனாகிய கண்ணன், நின்று - அர்ச்சுனன் பக்கத்தில் இருந்து, தேர் - தேரை, நனி கடாவினும் - நன்றாகச் செலுத்தினாலும், போரின் இடை - போர் செய்கையில், எனது - என்னுடைய, ஆடல்வெம்சிலை - ஆற்றலுடைய கொடிய வில்லினுடைய, ஆண்மை-சிறப்பை, அன்று - அப்பொழுது, காணலாம்-காண்பீர்கள்.

விரிவுரை:—கண்ணனைக் கொல்லும்படி கம்ஸன் ஏவிய அசுரன் ஒருவன், பசுங்கன்றின் உருவத்தை எடுத்துக்கொண்டு மந்தையோடு கலந்து சமயம் பார்த்திருந்ததை அறிந்த கண்ணன், மாலையில் திரும்பும் போது தன்னுடன்வந்த ஆயர் சிறுவர்களது விருப்பிற்கிணங்கி வழியில்நின்ற விளாமரத்தினின்று காய்களை உதிர்க்க அம் மாயக்கன்றினையே குணில் ஆகப் பற்றி மோதி அவ்வசுரனை மாய்த்த கதை இங்குக்குறிக்கப் பட்டிருக்கின்றது. 'கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்' என்ற அச் சிலப்பதிகார அடியை மனத்திற் கொண்டு 'கன்றினுல்விளவெறிந்தகள்வன்' எனவில்லி வரைந்தனர்போலும்.

குறிப்பு:--அங்கர் + பூபதி = அங்கர்பூபதி (அங்கர்களுடைய பூமிக்குப்பதி) ஆறும் வேற்றுமைத்தொகையாயினும் நிலைமொழி உயர்திணையாதலால்வருமொழி முதல் வல்லினமெய் மிகவில்லை. (வால்யூம் 7, பக்கம் 297).

பூ + பதி = பூபதி. (பூமிக்குப் பதி) நான்காம்வேற்றுமைத் தொகையாயினும் நிலைமொழி சமிஸ்கிருதச் சொல் ஆகையால் வருமொழி முதல் வல்லினமெய் மிகவில்லை. (வால்யூம் 7, பக்கம் 260)

விசயனை + சென்று = விசயனைச்சென்று. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினமெய் மிகுந்தது.

சென்று + சீறி = சென்று சீறி. மென்றொடர்க்குற்றியலுகரத்தை ஈற்றிலுடைய வினையெச்சத்தொடரில் வருமொழி வல்லினமெய் மிகவில்லை.

உயிர் + கொள்ள = உயிர் கொள்ள. இரண்டாம் வேற்றுமைத்தொகையாதலால் வருமொழிமுதல்வல்லினமெய் மிகவில்லை.

எறிந்த + கள்வன் = எறிந்த கள்வன்-பெயரெச்சத்தொடராதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

---

அம்ப ரத்தவ ருட்ன்று சீறினுமோ
ரம்பிலே யழிவர்த்திண் ணம்யான்
வெம்ப ணிப்பக ழியேவி லாவியுடன்
மீளுவா னமரில் விசயனே
விம்ப ரிற்புகல விருத ளத்தினு
மெனக்குநே ரொருவ ரில்லையென்
றும்பர் கற்பகமு நாண வுண்மையி
னுயர்ந்த வீரனிவை யுரைசெய்தான். 67

m211,N28KN
N34.3.23
199173

தேவர்களுமேதனக்கு நிகரில்லாதவர்எனில் பூலோகத்தார் எம்மாத்திரம் என்று பின்னும் கர்ணன்பேசுகின்றான்.

பதவுரை.

அம்பரத்தவர்- தேவலோகத்தவர், உடன்று-மாறுபட்டு, சீறினும் - கோபங்கொண் டெழுந்தாலும்,ஓர் அம்பிலே - எனது ஒரு அம்பினால், அழிவர் -அழிந்துபோவார், திண்ணம் - இது நிச்சயம்.

வெம் - கொடிய, பணிப்பகழி - நாகாஸ்திரத்தை, யான் - நான், ஏவில் - ஏவினால், அமரில் - போரிலிருந்து, ஆவியுடன்-உயிருடன், மீளுவான் - மீளுபவன், விசயனே - அர்ச்சுனனே.

இம்பரில் - இப் பூலோகத்தில், இரு தளத்தினும்- பாண்டவர்பக்கத்தில் ஆகட்டும் கௌரவர் பக்கத்திலாகட்டும், எனக்கு நிகர் - எனக்குச் சமானமானவர் என்று, புகல - சொல்வதற்குக் கூட, ஒருவர்- எவரும், இல்லை - இல்லை, என்று - என்று, உம்பர்-தேவர்களுடைய, கற்பகமும் - கற்பகவிருக்ஷமும், நாண - நாணமுறும்படி, வண்மையில்-கொடையில், உயர்ந்த வீரன் - சிறந்த வீரனாகிய கர்ணன், இவை - இவைகளை, உரைசெய்தான் - சொன்னான்.

---

திசைய னைத்தினும் வளைந்த தானவரை
யிரவி வந்ததொரு திசையின்வாய்
நிசியெ னப்பொருது வான வர்க்கர
சளித்து வந்தவிற லீர்மையான்
விசய னுக்குநிகர் நீகொலோ கடவுள்
வெண்ம திக்குநிகர் வெள்ளியோ
வசையில் விற்றொழிலும் வல்லை யோவென
வொரசைவி லாதவ னறைந்தனன் 68

ஆற்றல்அதிகமுடையவனாயினும் கர்ணன்அர்ச்சுனனுக்கு நிகராகமாட்டானென்று பீஷ்மன் எதிருரைக்கின்றான்.

பதவுரை.

திசை அனைத்தினும்-எல்லாத்திசைகளிலிருந்தும் ஒருங்கேவந்து, வளைந்த - சூழ்ந்துகொண்ட, தானவரை - (நிவாதகவச காலகேயர் என்னும்) அசுரர்களை, இரவி - சூரியன், வந்ததொரு - வந்த, திசையின்வாய் - திசையில், நிசிஎன - இருளைப்போல், பொருது - சண்டைசெய்தழித்து, வானவர்க்கு - தேவர்களுக்கு, அரசு - அவர்களது பொன்னுலகத்தை, அளித்து - மீட்டுக்கொடுத்து, வந்த - திரும்பின, விறல் ஈர்மையான் - ஆற்றல் பொருந்திய, விசயனுக்கு - அர்ச்சுனனுக்கு, நிகர் - சமானம், நீகொலோ - நீ ஆவாயோ.

கடவுள் - தெய்வத்தன்மை பொருந்திய, வெண் - வெண்மையான, மதிக்கு- சந்திரனுக்கு, நிகர் - சமானமாவது, வெள்ளியோ - சுக்கிரனோ!

வசையில்- பழுது இல்லாத, வில் தொழிலும் - வில் வித்தையும், வல்லையோ - நீ வல்லவனோ,

என - என்று, ஒருஅசைவு - ஒருவிதமான பக்ஷபாதமும், இலாதவன் - இல்லாதவனாகிய பீஷ்மன், அறைந்தனன் - சொன்னான்.

விரிவுரை:—அந்தண னென்று கர்ணன் பொய்கூறித் தன்னிடம் கற்றவிற்றொழில் சமயத்தில் பயன்படா தொழியக் கடவதென்று பரசுராமன் இட்ட சாபம் இங்குக் குறிக்கப்பட்டிருக்கிறது.

## இலக்கணம்

L. இடைச்சொற் றொடர்.

இடைச்சொல்லை நிலைமொழியாகப் பெற்று வருகின்ற தொடர் இடைச்சொற்றொடராகும். தனக்கே தனியானபொருள் ஒன்றும்இன்றி வேறொருபெயர்ச்சொல்லையேனும் வினைச்சொல்லையேனும் சார்ந்துநிற்கின்ற இடங்களில் மாத்திரம் பொருள்படக்கூடிய சொற்கள் இடைச்சொற்கள் எனப்படும் (வால்யூம் 5. பக்கம், 364)

பொருள்படும் வகையினால் இடைச்சொற்கள்பல இனத்தன. அவ் வினங்களில் சிலவற்றைத் தனித் தனிகொண்டு, அவைகளுக்குப் பின்வரும் மொழிமுதல் வல்லினமெய் புணருமாறு எவ்வாறெனக் காண்போம்:—

(a) அ இ உ, என்னும் சுட்டு இடைச்சொற்களுக்குப் பின்னும், எ என்னும் வினா இடைச்சொல்லுக்குப் பின்னும் வருமொழிமுதல் வல்லினமெய்மிகும்.

அ + குதிரை = அக்குதிரை
இ + காலம் = இக்காலம்
உ + சிங்கம் = உச்சிங்கம்
எ + தேசம் = எத்தேசம்.

(1) இச் சுட்டு வினாக்களின் அடியாகப் பிறந்த அந்த இந்த எந்த என்னும் சொற்களுக்குப் பின்னும் வல்லினமெய் எப்பொழுதும் மிகுந்தே வரும்.

அந்த + பையன் = அந்தப்பையன்
இந்த + காடு = இந்தக்காடு
எந்த + சகடம் = எந்தச்சகடம்.

(2) அங்கு, இங்கு, உங்கு, ஊங்கு, எங்கு ஆண்டு ஈண்டு யாங்கு யாண்டு என்பனபோல், சுட்டு வினாப் பொருள்களோடு கலந்து ஏழாம்வேற்றுமை இடப் பொருள் உணர்த்துகின்ற இடைச்சொற்களுக்குப் பின் வல்லினமெய் மிகுந்தே வரும்,

அங்கு + கண்டேன் = அங்குக்கண்டேன்
யாண்டு + சென்றாய் = யாண்டுச்சென்றாய்
எங்கு + திருடினாய் = எங்குத்திருடினாய்.

(3) ஆனால், அன்று இன்று என்று பண்டு முந்து, என்பனபோல் ஏழாம்வேற்றுமைக் காலப்பொருளை உணர்த்துகின்ற இடைச்சொற்களுக்குப் பின் வல்லினமெய் மிகாது.

அன்று + சென்றேன் = அன்று சென்றேன்.
இன்று + தந்தேன் = இன்று தந்தேன்.
என்று + காண்பேன் = என்று காண்பேன்.

(4) யா என்னும் வினாஇடைச்சொல்லிற்குப் பின் வரும் வல்லினமெய் மிகாது.

யா + சிறிய = யாசிறிய
யா + பெரிய = யாபெரிய.

குறிப்பு:—அது இது எது யாது, என்று நிற்கும் சுட்டு வினாச் சொற்களுக்குப்பின்னும் வல்லினமெய் மிகாது.

அது + பெரிது = அது பெரிது
எது + சிறி = எது சிறிது
யாது + கூறினாய் = யாது கூறினாய்

(b) போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, என்பனபோன்ற உவம உருபுகளுக்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.



கிளிபோல + பேசினாள் = கிளிபோலப் பேசினாள்.
புயல்புரைய + பொழிந்தான் = புயல்புரையப் பொ
[ழிந்தான், முதலியன.

குறிப்பு:—அன்ன, என்னும் உவமஉருபு இடைச் சொல்லிற்குப்பின் வல்லினமெய் மிகாது.

கார்அன்ன + கூந்தல் = கார்அன்ன கூந்தல்.
தீயன்ன + சொல் = தீயன்ன சொல்.

(c) முன்னிலை அசைகளாக வரும், மியா, மதி, வாழியஎன்பனபோன்ற இடைச்சொற்களுக்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

கேண்மியா + கொற்றவ = கேண்மியா கொற்றவ.
அருண்மதி + புலவ = அருண்மதி புலவ.
(காணிய வா) வாழிய சாரல் = வாழிய சாரல்

(d) இனி என மற்று ஆங்க, என்னும் இடைச் சொற்களுக்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

இனி + காணேன் = இனிக்காணேன்
என + சொன்னான் = எனச்சொன்னான்.
மற்று + தீமை = மற்றுத்தீமை
ஆங்க + குயில் = ஆங்கக்குயில்.

(e) வாளா சும்மா, என்னும் பயனின்மைப்பொருளைத் தரும் இடைச்சொற்களுக்குப்பின் வரும் வல்லினமெய் மிகாது.

வாளா + சென்றான் = வாளா சென்றான்.
சும்மா + போ = சும்மா போ.

(f) மன்ற,என்னும்நிச்சயப்பொருள்தரும்இடைச் சொல்லிற்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

மன்ற + தடவுநிலை = மன்ற தடவுநிலை

(g) தெளிவு ஐயம் வினா பிரிநிலை, முதலிய பொருள்களில் வரும் ஏகார ஓகார இடைச்சொற்களுக்குப் பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

நீயே + சொல் = நீயே சொல்.
அவனோ + பெரியன் = அவனோபெரியன்.

குறிப்பு:—இப் பொருள்களல்லாமல் முன்னிலையிடத்து முதல் வருகின்ற ஏகார ஓகாரங்கள் அளபெடுத்து நிற்கும்போது வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

ஏஎ + குமர = ஏஎக்குமர.
ஓஒ + கொற்றவ = ஓஒக்கொற்றவ.

(h) வேற்றுமை உருபுகளாகவரும்இடைச்சொற்களில், ஐ க்குப்பின்னும், கு விற்குப்பின்னும், வருமொழிமுதல் வல்லினமெய் மிகுவதும்,ஒடு.ஓடு,அது, அ, என்பனவற்றிற்குப் பின் மிகாததும், ஏழாம் வேற்றுமையுருபுகளுக்குப்பின் மிகுந்தும் மிகாமலும் வருவதும் முன்னரே கூறப்பட்டிருக்கின்றன.

---

## "எது வேண்டும்"

(ஒரு சிறு கதை)

[349-வது பக்கத் தொடர்ச்சி]

புகலூர்க்கடுத்த ஒவியத்துப்பள்ளத்தில் மாடுமேய்த்துக்கொண்டிருந்த ஓர் இளைஞனைப் பார்த்து,"தம்பி, உனக்குநாள்தோறும் மாடுமேய்ப்பதுதான்வேலையா? என்று கேட்டார் ஓர் பெரியவர். "மாடுமேய்ப்பது மட்டுமல்ல, அதிகாலையில் எழுந்திருந்து வாசல் வெளிகளையெல்லாம் கூட்டி வாரிவிட்டு, பழையசோறு பருகியபின்பு, காலைப் பத்துநாழிகைப்பொழுதிற்கெல்லாம் மாடுகளை ஓட்டிவருவேன்" என்றான்சிறுவன்.

"தினந்தோறும் இதே வேலை செய்வது உனக்குக் கஷ்டமாக இல்லையா?"

"எனக்கென்ன கஷ்டம்? இந்த வேலை எனக்கு எவ்வளவோ சந்தோஷமாக இருக்கிறதே. காலைப் பத்துநாழிகைப் பொழுதிற்கெல்லாம் மாடுகளை ஓட்டிக்கொண்டு வருகிறேனா; வந்தவுடன் உச்சிப்பொழுதுவரை மாடுகள் பல விடங்களிற் சென்று மேய்ந்து, கூழாங்கற்களில் பட்டுவருவதால் "சல சல" வென்ற சப்தம்கேட்டவண்ணமாயிருக்கும்அந்தக் காட்டாற்றில் நீர்குடித்து, வெயிலுக்கு இந்த மரநிழலில் வந்து கூடும். வெயில் கொஞ்சம் தணிந்ததும் கூடியிருந்த மாடுகளைப் புல்மேய ஓட்டிவிடுவேன். மேற்கே தெரிகிறதே, அந்தக் குன்றுக்கு நேராகச் சூரியன் 'தகதக' என்று பிரகாசித்துக்கொண்டிருக்கையில் நான் மாடுகளை வீட்டிற்கு ஓட்டிச்செல்வேன். அப்பொழுது காடுகரைகளில் சிதறிக்கிடந்த கம்பு சோளம் முதலிய தானியங்களைப் பொறுக்கித் தின்றுகொண்டிருந்த காக்கைகள் 'கா கா' என்று கத்திக்கொண்டு எங்கள் ஊரைப்பார்த்துப் பறந்து செல்லும். கிளி நாகணவாய் கழுகு கருடன் கொக்கு முதலிய எத்தனையோ விதமான பறவைகள் பலவகையான குரல்களால் பாடிக்கொண்டு கூட்டங்கூட்டமாய்ப் பறந்து செல்லும். நான் வீட்டிற்கு ஓட்டிக்கொண்டு போகும்பொழுது பார்க்கவேண்டுமே இந்த மாட்டுமந்தையின் குதூகலத்தை! சில எருதுகள் வாலை உயரத் தூக்கிக்கொண்டு நாலுகால் பாய்ச்சலோடு இங்கும் அங்குமாக ஓடும். பசுமாடுகள் தம் இளங் கன்றுகளை நினைத்து 'அம்மா' என்று அலறியவண்ணம் வேகமாகச்செல்லும். இவற்றை யெல்லாம் பார்க்கையில் எனக்குப் பசிகூடத் தோன்றாது. காலையில் கஞ்சி குடித்துவிட்டு வருகிறேனே, அதுதான்; அப்புறம் இராத்திரிக்குத்தான்."

"இதையா நீ கஷ்டமில்லாத வேலை யென்கிறாய்? உன் மேனியைப் பார். சதா வெயிலிலேயே அலைந்து ஒரே கருப்பாகக் கருத்துவிட்டது. பத்தரை மாற்றுத் தங்கம் என்று நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? அப்படியிருக்கவேண்டும் உடம்பு."

"உடம்பு அழகாயிருந்தால் போதுமோ, ஐயா? வேலை சோறுபோடுமா, அழகு சோறு போடுமா?"

"வேலை சோறு போடும்; ஆனால்அது மனிதர்க்குத் துன்பமாயிருக்கும். அழகு இருக்கிறதே—அதனால் சோறுபோட முடியாதென்றா நினைக்கிறாய் நீ? மயிலை வளர்க்கிறோமே, குயிலை நாம் ஏன் வளர்ப்பதில்லை?"

"நீங்கள் சொல்வது நியாயமாகத்தான் இருக்கிறது கருத்துப்போன என் உடலுக்கு இனி அழகு எங்கிருந்து வரப்போகிறது?"

"அப்படியே நினைத்து நீ சலிப்படைந்துவிடாதே; 'அழகுக்கு அழகு உண்டா? கிடையாது என்று சிலர் சொல்லுவார். ஆனாலும், அழகுக்கு அழகுசெய்வது என்ற வழக்கம் இப்பொழுதல்ல, மிகப் பழைய காலத்திலிருந்தே நடந்துவருகிறது. 'தென்னிலங்கை ராவணனைச் சென்னிபத்தும் கொய்து அளித்த" இராமரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?

"தொண்ணூறுஞ் சாலு சென்னுதடா ராமா?' என்று நாங்கள் ஏத்தப்பாட்டில் பாடுகிறோமே அந்த ராமரா?"

"ஆம், அவர்தான், தெரியுமா?"

"கொஞ்சநாளைக்கு முன்புகூட எங்கள் ஊரில் 'ராம நாடகம்' ஆடினார்கள்; ராமர் என்றும், சீதையம்மன் என்றும்,ராவணன் என்றும் இன்னும் என்னென்னவோ வேஷம்போட்டுக்கொண்டு ஆடினார்கள்."

"ஆம், அது வேஷம்; நெடுங்காலத்திற்கு முன்பு சாக்ஷாத் மகாவிஷ்ணுவே ராமராக அவதரித்தார்; மகாலக்ஷ்மிதான் சீதையம்மன். அழகிற் சிறந்தவள் இரதி யென்பார்கள்; அந்த அழகெல்லாம் இலக்ஷ்மி கொடுத்த பிச்சைதான். அந்த இலக்ஷ்மியே பின் சீதையாகப் பிறந்தபொழுது அப்பிராட்டியின் பேரழகைச் சொல்லவேண்டுமா? அழகுக்கு ஒரு அழகு செய்வது என்ற வழக்கம் அப்பிராட்டியின் கலியாண காலத்திலே நடந்தது. உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை யுருவினை மறைப்ப தோரார், அமிழ்தினைச் சுவை செய்தன்ன அழகினுக் கழகுசெய்தார். எல்லாவற்றிலும் மிக்க சுவையுடையது அமிர்தம், அவ்வமிர்தத்திற்கு இன்னும் சுவையூட்டுவார் செய்கைபோல அழகே ஓர் வடிவெடுத்து வந்ததன்ன பிராட்டிக்குப் பிரகாசம் வீசும் ஆபரணங்கள் பல பூட்டி அழகு செய்தார்கள். ஆகவே வேறு அழகில்லாதவர்க்கு அழகுசெய்வது மிகவும் அவசியமல்லவா?"

"நேற்று இராத்திரிகூட எங்கள் ஊரில் வீராசாமி வாத்தியார் ராமாயணப்பாட்டுப்படித்தார்கள்.'காலிற் சிலம்பணிந்து கனகமணித் தண்டையிட்டு, முன்கை முதாரி முன்கை வளைதான் சுற்றி, தங்கச் சரப்பளியும் தரித்து, வைடூரியமும் காதிலே குண்டலங்கள் கதிரொளிபோல் தான் சார்த்தி,முத்துவடமும்முழு வயிரப் பதக்கமுடன், தும்பிப் பதக்கமுடன் சூடாமணிக் கவசம், வில்லைச் சரப்பளியும்வேணபணியாபரணம், பாத முடிவரைக்கும் பலபணிகள் தான் பூட்டி'என்றுசீதையம்மனது கலியாண வைபவத்தைச் சொன்னார்கள்."

"விளக்குமாற்றிற்குப் பட்டுக்குஞ்சம் கட்டினாற்போல" என்று கேள்விப்பட்டிருக்கின்றாயா? பட்டுக்குஞ்சம்|கட்டினதும் கேவலம்விளக்குமாறுகூட அழகாய்த் தோன்றுமாம். அப்படியிருக்க நீ அழகுடையவன் ஆவதற்குச் சந்தேகப்படவேண்டியதில்லையே"

"சந்தேகப்படவில்லையானாலும் அத்தகைய நகைகளுக்கு நான் எங்கே போவது?"

"அப்படிக் கேள்; எந்தவிதத்தில் எவ்வளவு நகைகள் வேண்டுமானாலும் நான் தருகிறேன் வா"

"அவற்றை எங்கே வைத்திருக்கிறீர்கள்?"

"இங்கிருந்து இன்னும் சிறிது தூரத்தில் எனது இருப்பிடமிருக்கிறது. அங்கே வைத்திருக்கிறேன்; எருதுகள் இங்கேயே புல் மேயட்டும்; நான் கொடுப்பவற்றைப் பெற்றுக்கொண்டு கொஞ்சநேரத்திற்குள் நீ இங்கே திரும்பி வந்துவிடலாம்"

இளைஞன் சம்மதக் குறியாகத் தலையை அசைத்து, "நல்லது வருகிறேன்" என்றான். இவ்வளவும் மாடு மேய்க்கும் ஓர் சிறுவனோடும் நடந்த சம்பாஷணையா என்று நேயர்கள் இங்கே ஆச்சரியப்படலாம். இத்தகைய ஆச்சரியம் எனக்குந்தான் நிகழாமல் இல்லை; ஆனால் "சுட்டபழம் வேண்டுமா, சுடாதபழம் வேண்டுமா?" என்று வினவி, தமிழ் உலகில் பெரும் பேர் படைத்த ஔவையாரை வஞ்சித்தவன் மாடுமேய்த்த ஓர் சிறுவன்தான் என்பது எனது நினைவிற்கு வந்ததும் அந்த வியப்பிற்கு இடமில்லாமற்போயிற்று.

சிறுவனோடு உரையாடிய பெரியவர் இன்னாரென்பதை இதற்குள் வாசகர்கள் உணர்ந்திருக்காலம்.முருகன் என்றசிறுவனை யழைத்துச்சென்று ஓர்குகையில் அடைத்து மீண்ட முதியவர்தான் இவர். அவ்வாறே இவ்விளைஞனும்முதியவரும் நெடுந்தூரம்சென்றனர். முருகனைப்போலவே இவனும் மனம் மருண்டு திரும்பிச்செல்ல முயன்றான். ஆனால், பெரியவரா விடுபவர்? 'அதோ தெரிகின்றது பார் மலை; மிகஅருகில் வந்துவிட்டோம்" என்று கூறிக்கொண்டே அவனை யழைத்துச் சென்றார். "ஐயா, இனிமேல் நான் வரமுடியாது; வீட்டிற்கு எருதுகளை ஓட்டிப்போகின்ற நேரமாகிவிட்டது; அதோ பாருங்கள் பொழுது மறையும் தறுவாயிலிருக்கிறது; கொக்கு குருவிகள் எல்லாம்தத்தம்இருப்பிடத்திற்குப் பறந்துசெல்கின்றன; நாளைக் காலையில் வருகிறேன்" என்றான் சிறுவன்.

"நாளைக்கா? நாளைநாளை யென்பதெல்லாம் காலத்தை வீணேகழிப்பவரது வெறும் பேச்சு. 'நாளைக்குக் கிடைக்கும் பலாப்பழத்தைக் காட்டிலும் இன்றைக்குக் கிடைக்கும் களாப்பழம் சிறந்தது? என்ற பெரியவர்கள் பேச்சைக் கேட்டதில்லையா? சூரியன் அஸ்தமிக்கிற சமயம் என்பது உண்மைதான்; ஆனால் இப்பொழுது வீசுகிற சூரியனுடைய கிரணங்களைப் பார்த்தாயா? உனக்கு நான் கொடுக்கிறதாகச் சொன்னேனே நகைகள், அந்த நிறம்! இந்த மலை, இதில் உள்ள மரம் செடிகொடிகள், அதோ தெரிகிற பசும்புல்தரை எல்லாம்ஒரே தங்கநிறமாகஜொலிக்கிறதுபார்!மேலே பறவைகள் பாடிக்கொண்டு செல்கின்றனவே அவைகள் என்ன பேசிக்கொண்டு போகின்றன தெரியுமா? உனக்குஇனிவரப்போகும்அழகின் அதிர்ஷ்டத்தைக் குறித்துத் தங்கள் பாஷைகளில் பேசிக்கொண்டு போகின்றன! தம்பி, உன் பெயர்என்ன?"

"என் பெயர், அழகுமலை"

"அழகுமலையா? எவ்வளவு நல்ல பெயர்! பெயருக்கேற்றபடி உனக்கு அழகு இருக்கவேண்டாமா? என்றுபேசிக்கொண்டே மலையடிவாரத்தை யடைந்தனர். அடைந்ததும் அப்பெரியவர் அங்கிருந்த ஒரு பெரிய பாறைமீது ஏறிநின்று தன் இரண்டு கைகளையும்உலுக்கினார். இரண்டு கைகளிலும் முன்போலவேஇரண்டு பைகள் இருந்தன. அவற்றைக் காட்டி, "இந்த இரண்டு பைகளில் சிறுவா, உனக்கு எது வேண்டும்?" என்று கேட்டார். சிறுவன் மிகத் தந்திரமுள்ளவன்; எதையாவதுஒன்றை இவர்தானேகொடுக்காமல் எது வேண்டும் என்று கேட்பதால், இதனில் ஏதோ சூது இருக்கவேண்டும் என்று நினைத்து, "அந்தச் சின்ன பைதான் வேணும்" என்றான். "நீ இனி அழகுமலைதான், ஐயமில்லை" என்று கூறி அப்பையை அவிழ்த்துக் கொட்டினார். மண் உருண்டைகள் போலச் சில பொற்கட்டிகள் அதன் உள்ளிருந்து விழுந்தன! சிறுவன்," என்ன ஐயா, களிமண் உருண்டைகள் போலிருக்கின்றன. இவற்றை என்ன செய்வது?" என்று ஏமாப்போடு கேட்டான். அதுகேட்ட அப்பெரியவர், "மண் உருண்டைகள் அல்ல, தங்கக் கட்டிகள்; இவற்றை என்னசெய்வது என்பதை இனி நீ தெரிந்துகொள்ளவேண்டும்" என்று கூறி அந்தப் பாறைக்கு நேரே தனது வலதுகரத்தை உயர்த்தினார். "மளமள" என்ற சப்தத்தோடு இரண்டு பிளவாக விரிந்தது அப்பெரியபாறை!"இவர் என்ன மந்திரவாதியோ மாயாவியோ தெரியவில்லை; இவர்பேச்சைக்கேட்டு மோசம் போய் வீணே உயிருக்குத் தீங்குதேடிக் கொண்டோமே" என்று மதிகலங்கித் திகைப்புற்றுநின்றான் அழகன்.அதனை அவனதுமுகக்குறிப்பினால் தெரிந்துகொண்டபெரியவர்,"அழகா உன் மனக்கிலேசத்தைத் தெரிந்துகொண்டேன்; உனக்கு நன்மை செய்யவேண்டுமென்பதைத்தவிர வேறு எண்ணம் என்னிடம்இல்லையென்பதை உறுதியாகநம்பு. இந்தப்பொற்கட்டிகளையெடுத்துக்கொண்டு என்னோடுவா" என்றுகூறிஅவன் கையைப் பிடித்துக்கொண்டு குகைவழியில் இறங்கினார்.சிறுவன் தடுமாற்றத்தோடு பெரியவரைப் பின்பற்றி வந்தான்.குகையில் இறங்கியதும் முதியவர் வலது கையை உயர்த்திப் பிளவுபட்ட பாறை ஒன்றுசேரும்படி செய்துவிட்டார்; அச்சத்தினால் சிறுவன் கூக்குரலிட வாய்திறந்தான். அதற்குள் அதியற்புதக் காட்சிகள் பல அவனை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டன. படிகளெல்லாம் தங்கத் தகடுகளாற் செய்யப்பட்டிருந்தன; அவற்றில் நடந்து செல்பவர்தம் பாதங்கள்வழுக்கிவிடாமல் இருக்கவேண்டி அந்தத் தங்கப்படிகளில் நவமணிகள் பதிக்கப்பட்டிருந்தன! தங்கத்தின் ஒளியும் நவமணிகளின் ஜொலிப்பும் கலந்து அக் குகை வழிமுழுதும் ஒருவித புது ஒளியால் பிரகாசித்தது. மயன் என்ற தேவ தச்சனால் செய்யப்பட்ட சுவர்க்க மாளிகையின் படிகளைப்போல் இருந்ததேயன்றி ஒரு மலைக்குகையின் படிகள் என்று எண்ணுவதற்கில்லை. அப்படிகளின் வழியாயிறங்கி ஓர் சோலையை அடைந்தனர். மரம் செடி கொடி வகைகளில் எவ்வளவு உண்டோ அவ்வளவும் அங்கிருந்தன. "கொழுகொழு என வளர்ந்த பசும்புற் றரைகளும், அவற்றிடையே துள்ளிக் குதிப்பனபோன்ற புள்ளிமான்களும் பசுக்களின் கூட்டமும், இளங் காளைகளின் தொகுதியும் தம் அழகிய காட்சியால் பார்ப்போர் மனதைக் கொள்ளைகொண்டன.

மா பலா வாழை முதலிய மரங்களில் கண்டோர் நாவில் நீர் சுரக்கும்வண்ணம் கனிகள் நிறைந்திருக்கின்றன. மல்லிகை முல்லை முதலிய நிலப்பூக்களும், அல்லி தாமரை முதலியபல நீர்ப்பூக்களும் மலர்ந்து அழகு செய்தன. இவைகளெல்லாம் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கினும் மனதிற் கின்பமூட்டும் மணமோ சிறிதும் அவைகளிலில்லை. இதற்குக் காரணம்அவையனைத்தும் செயற்கைப்பொருள்கள். மரம் செடிகொடிகளோ மான்முதலியமிருகங்களோ அவை அனைத்தும் உயிரற்றவை! இரும்பு வெள்ளி பொன் செம்பு முதலிய உலோகங்களால் மரம் முதலியவை உயிருள்ளனபோல்செய்யப்பட்டிருக்கின்றன! இலைகள் அனைத்தும் மரகதங்கள்!கனிகளனைத்தும் நவமணிகள்!பளிங்குக்கற்களால் செய்யப்பட்டவை அப்பசுமந்தைகள்! இவற்றைக் கண்டபொழுது அழகனுக்கு உண்டான ஆச்சரியத்தை அளவிட் டுரைக்க முடியாது. அழகனுக்கு மட்டும் என்ன, இதைப்படிக்கும் நமக்கே எவ்வளவு வியப்புண்டாகின்றது? இவையனைத்தும் கனவோ என்று தனது இரண்டு கண்களையும் நன்றாகத் துடைத்துப் பார்த்தான். கனவு கனவாக முடியுமா? நரைத்து நீண்ட தாடி மீசைகளை யுடைய முதியவர் புன்சிரிப்போடு முன்னேநிற்கின்றார்; கண்டவையனைத்தும்அவன் கண்ணிற்கு அப்படியே புலனாகின்றன;எங்ஙனம்கனவென்று நினைப்பான்? "தந்தையே, எனக்கு ஒன்றுமேவிளங்கவில்லை; தேவலோகம் என்று சொல்கிறார்களே, அதுதானோ இது?" என்று வியப்போடு அம்முதியவரைக் கேட்டான். "இது தேவலோகமும் அல்ல, பாவலோகமும் அல்ல, பூலோகந்தான். இன்னும் நீ பார்க்கவேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன" என்றார்பெரியவர். பின்பு அவ்விருவரும் சோலையை நீங்கிச் சிறிதுதூரம் சென்றனர். சிறிதும் சப்தமின்றிச் சென்றுகொண்டிருந்த தெளிந்த நீர்ப்பெருக்கையுடைய ஓர் பெரிய ஆற்றை யடைந்தனர். அதன் இருகரையிலும் பாக்குமரங்களின் வரிசையும், பசிய மூங்கில்களின்தொகுதியும், மா பலா முதலியவற்றின் செறிவும் வானுற ஓங்கித்திகழ்ந்தன. அங்குஅப்பெரியவர் "இந்த ஆற்றைக் கடந்துசெல்ல ஓடமில்லை; நடந்துதான் போகவேண்டும்" என்று அவன் கையைப் பிடித்தார். "நடந்தா, நீந்தியல்லவா செல்லவேண்டும்; நீந்தலாமென்றாலும் இத்தனை அதிக வெள்ளப் பெருக்கில் என்னால் முடியாது;உங்களால்முடியுமா?" என்று திகைப்புற்று வினவினான் அழகன்.

"நீந்தவே வேண்டாம்; நடந்து சென்றே இந்த ஆற்றைக்கடக்க நம் இருவரால் முடியும்"

'நீர்மேல் நடக்கலாம் எட்டியும் தின்னலாம்' என யாரோ ஒரு சித்தர்கூடச் சொல்லியிருக்கிறார்; அத்தகையமந்திரம் உங்களிடத்தில் யாதேனுமிருக்கிறதா?"

"மந்திரமில்லை, தந்திரந்தான்"

"அப்படியானால் நீங்கள் முன்னே செல்லுங்கள்; நான் பின்னால் வருகிறேன்."

"நல்லது, வா" என்று கூறி முன்னால் சென்றார் முதியவர். அவர் இடுப்பில் கட்டிய துணியைச் சிறிதும் மடித்துக்கட்டாமல் அப்படியே சென்றார். அவருடையதுணிநீரில் நனைந்து அலைந்தது. அதைக்கண்ட சிறுவன் தன் துணியை அவிழ்த்துக் கையிற்பிடித்துக் கொண்டு நடந்தான். அன்று பாஞ்சாலி துரியோதனன் செயலைக்கண்டு சிரித்ததுபோல் சிறுவன் செயலைக்கண்டு "கலகல" என்று சிரித்தார் கிழவர். ஆனால் பாஞ்சாலி சிரிப்புப் பரிகசச்சிரிப்பு; பெரியவர் சிரிப்பு அன்புச்சிரிப்பு. "சுவாமிகளே, இதுஉண்மையானநீர்ப்பெருக்கு அல்லவேபோல் தோன்றுகிறதே; கானல் நீர் என்பதற்கும் கதிரவன் கொடுமையில்லை; இது என்ன மாய நீர்?" என்று வியப்போடு கேட்டான் இளைஞன். "தம்பி, நீ நல்ல சூக்ஷ்மபுத்தி யுடையவன்.இதுவோ மாய நீர்தான். இருகரைகளிலும் பதித்துள்ள பளிங்குக்கற்களின் ஒளிதான் இந்த நீர்ப்பெருக்கு!"என்றார் அப்பெரியவர். "ஆச்சரியம் ஆச்சரியம்,நான் என்றும் கேட்டிராத விந்தைகளெல்லாம் இன்று இங்கே காண்கின்றேன்" என்றுமிக வியந்தான் சிறுவன்."இன்னும் இருக்கின்றன வா" என்று கூறிச் சென்றார்பெரியவர். மரகதங்களின் ஒளிவரிசையால் பசும்புற்றரைபோல் காணப்பட்ட நீர் ஓடும் ஓர் சிறு கால்வாயில் வீழ்ந்து தன் துணியெல்லாம் நனைத்துக்கொண்டு தடுமாறினான் சிறுவன். அவன் கையைப் பிடித்துக் கரையேற்றி எப்

படியிருக்கின்றன காட்சிகள்?" என்று கூறிச் சிரித்தார் அவர்.

"நானோ ஒரு சிறுவன்; நீங்கள் எப்படிவேண்டுமானாலும் என்னை வஞ்சிக்கலாம்" என்று சொல்லிச் சிறுவனும் கூடச்சிரித்தான். அப்பொழுது பெரியவர் "நீ பார்த்துப் பார்த்து வியந்து மகிழத்தக்கவை இவை; இனி நீ இவைகளைப்போல் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டிய ஓர் இடத்திற்குப் போகவேண்டும்" என்று கூறிச் சிறிதுதூரம் சென்றதும் அங்கு ஓர் பிரம்மாண்டமான மாளிகையின் வாசலையடைந்தனர். வாசலில் நின்றுகொண்டிருந்த இருவர் வினயமுடன் வந்தனமளித்து வழிவிட்டு விலகவும் அச் சிறுவனது கையைப்பிடித்தவண்ணம் பெரியவர் மாளிகையின் உள்ளே சென்றார். அங்கேயுள்ள காட்சிகளைக் கண்டு அழகன் அப்படியே ஸ்தம்பித்துவிட்டான். அங்கு இளைஞர்சிலர் பொன்னை உலையிலிட்டு உருக்கவும் கட்டவும் கம்பிகளாக இழுக்கவுமாக இருந்தனர். வேறுபலர் அட்டிகை, ஒட்டியாணம், சங்கிலி, வங்கி முதலிய அணிகளாகச் செய்துகொண்டிருந்தனர். "இப்படி இழு" "அவ்வாறு செய்" என்று அவர்களுக்கெல்லாம் உத்திரவிட்டுக்கொண்டிருந்த ஒரு வாலிபர் நம் பெரியவரிடம் விரைந்து வந்து வணக்கமளித்து நின்றார். "அன்பரே, இவ் அழகன் என்னும் சிறுவனையும் நம் சீடருள் ஒருவனாகச் சேர்த்துக்கொள்வீர்" என்று கூறி அழகுமலையை அவரிடம் ஒப்புவித்துமீண்டார் பெரியவர். (தொடரும்)

# இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

அங்கம் 3. களம் 1.

[343-வது பக்கத் தொடர்ச்சி]

*காதெரினும் அவள் பணிப்பெண்ணும் வருகின்றனர்.*

காதெரின்:—இந்த வீட்டை ஒரு சாப்பாட்டுக் கடையென்று சொல்லி அவர்களை அனுப்பியதே என் தமையன். என்ன குறும்பு அதற்கு! ஹ! ஹா! ஆகையால் மார்லோ அட்டகாசம் செய்வது ஆச்சரியமல்ல.

பணிப்பெண்:—அது மாத்திரமா அம்மா; நீங்கள் இந்த உடைகளை அணிந்துகொண்டு இந்தவழிபோனபோது, வந்தவர்களுக்கு வேண்டியதைக்கொடுத்து உபசரிக்கின்ற வேலைக்காரியோ நீங்கள் என்று அவர் என்னைக் கேட்டார். உங்களை வேலைக்காரிஎன்று எண்ணிக்கொண்டார் அம்மா, அவர்!

காதெரின்:—அப்படியா? ஆனால், அவரை அந்த மயக்கத்திலேயே வைத்திருக்கவேண்டும். இந்தஉடைகளில்நான் எப்படித்தோன்றுகின்றேன்சொல்? பார்க்கின்றவர் கவனத்தைச் சிறப்பாகக் கவரக் கூடியதாக இருக்கின்றதா?

பணிப்பெண்:— சிறப்பொன்றுமில்லை. வெளியிற் போகும்போது எல்லாரும் இம்மாதிரியான உடைதான் அணிந்துகொள்கிறார்கள்.

காதெரின்:—என்னுடைய முக அடையாளம் அவருக்குத் தெரியாதென்பது நிச்சயந்தானா?

பணிப்பெண்:—நிச்சயம்!

காதெரின்:—நானும் அப்படித்தான் நினைத்தேன். நாங்களிருவரும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தாலும், பயத்தாலும் கூச்சத்தாலும் அவர் ஒருமுறை கூட என்னை நிமிர்ந்து பார்க்கவில்லை.

பணிப்பெண்:—நீங்கள் இன்னாரென்பது தெரியாமல் அவரை மயங்கவைத்திருப்பதால் என்ன இலாபம் எதிர்பார்க்கிறீர் அம்மா?

காதெரின்:—முதலாவது, அவரால் நான் பார்க்கப்படுவேன். கலியாணத்திற்கிருக்கிற ஒரு பெண்ணிற்கு அதுவே பெரியஇலாபமல்லவோ. இரண்டாவது, இதனால் அவருடன் அறிமுகம் ஏற்படும். பெண்களில் 'பஜாரி' களாயிருப்பவர்களோடுதவிர மற்றவர்களோடு பழகத்துணியாத அவர்மீது இதனால் வெற்றியடைந்தவளாவேன். அதுவுமன்றி, அவருடைய உண்மையான குணம் எத்தகையதென்பதைச் சோதிப்பதற்கு இது நல்ல உபாயமும் ஆகும்.

பணிப்பெண்:...உங்கள் குரலையும் மாற்றிக்கொண்டு அவரை முற்றிலும் வஞ்சிக்கும்படி உங்களால் நடிக்க முடியுமென்று நம்புகிறீர்களா?

காதெரின்:—பயப்படாதே. வேலைக்காரி வழக்கங்களும் வார்த்தைகளும் எனக்கு நன்றாகத் தெரியும்- "ஐயா, 'கூப்பிட்டீர்கா?—' வந்துாட்டேன், வந்துாட்டேன்—" ஆகா, கொணந்துாட்டேன்,...இவ்வளவு தானே.

பணிப்பெண்:—அவ்வளவு தான்...இதோ அவரும் வந்துவிட்டார்.

[பணிப்பெண் போகிறாள்]

[மார்லோ வருகிறான்]

மார்லோ:—இந்த வீடுமுழுவதும் ஒரே கூச்சலாகக் கிடக்கின்றதே. கண்ணயர முடியவில்லையே. நான் எந்த அறைக்குச் சென்றாலும் அங்கேயும் தன் கதைகளைச் சொல்லிக்கொண்டு கூடவே வந்துவிடுகிறான் இந்த வீட்டுக்காரன். மாடியின்மேற் போனால் அங்கேயும் இந்த வீட்டுக்காரி தலையைத் தலையை ஆட்டிக்கொண்டு வாயை வாயை இளித்துக்கொண்டு என்னவோ சொல்ல வந்துவிடுகின்றாள். கடைசியில் இங்கேயாவது சற்று மூச்சுவிட அவகாசம் ஏற்பட்டதே! என்னநிலையில் நானிப்பொழுதுஇருக்கிறேனென்று யோசிக்கப் புகுந்தால்.........

[யோசனையில் ஆழ்ந்தவனாய் உலவுகிறான்]

காதெரின்:— ஐயா, கூப்பிட்டீர்களோ? தாங்கள் கூப்பிட்டீர்களோ?

மார்லோ:— (தனக்குள்) காதெரினோ, நிரம்ப கம்பீரமாகவும் கருத்தாளியாகவும் இருக்கிறாள். அவள் எனக்குப் பொருந்தமாட்டாள்.

காதெரின்:—தாங்கள் என்னைக்கூப்பிட்டீர்களோ?

[அவனுக்கு எதிரே எதிரே வருகிறாள்; அவனோ தலையைத் தலையைத் திருப்பிக்கொள்கிறான்]

மார்லோ:—இல்லை, போ! (தனக்குள்) அன்றியும் அரைகுறையாய் நான் பார்த்தவரையில், அவளுக்கு ஓரக்கண் இருப்பதாகவும் தெரிகிறது.

காதெரின்:—தாங்கள் கூப்பிட்டாப்போலிருக்கிறதே!



மார்லோ:—இல்லை, இல்லை, போ போ! (தனக்குள்) இருந்தாலும் என் தகப்பனார் திருப்திக்காக வந்தேன்; இனி என் திருப்திக்காகப் பொழுதுவிடிந்ததும் திரும்பிவிடுவேன்.

காதெரின்:— நீங்கள் கூப்பிடாவிட்டால் வேறு யார் கூப்பிட்டிருப்பார்?

மார்லோ:—நான்தான் கூப்பிடவில்லையென்றுசொல்கிறேனே.

காதெரின்:—இருந்தாலும், கொஞ்சம்யோசித்துப் பாருங்கள்; கூப்பிட்டிருக்கலாம்; கூப்பிட்டபோது வரவில்லை என்ற கெட்டபேர் எனக்கு வரப்படாது.

மார்லோ:—நான் கூப்பிடவில்லை, நிச்சயம் (அவள் முகத்தை நன்றாக நிமிர்ந்து பார்க்கிறான்). ஆம் ஆம், பெண்ணே, கூப்பிட்டேனென்றுதான் நினைக்கிறேன். எனக்கு என்னவேண்டுமென்றால்.... எனக்கு என்ன வேண்டுமென்றால்—நிச்சயமாக, பெண்ணே, நீ நிரம்ப அழகாக இருக்கிறாய்.

காதெரின்:—ஏ, ஐயா, இப்படிஎல்லாம் சொல்லாதீர்; எனக்கு வெட்கமாக இருக்கிறது.

மார்லோ:—உன் கண்களைப்போல் குறும்பும் உல்லாசமும் கூடிய கண்கள் நான் இதுவரையிற் பார்த்ததில்லை. ஆம், ஆம், கண்ணே, உன்னைக்கூப்பிட்டேன். இங்கே, இது இருக்கிறதோ...இது...இதுதான்.... இந்த வீட்டிலே அதை என்னவென்று சொல்வது?

காதெரின்:—அதுவா? அது இல்லை. அது இல்லாமற்போய்ப் பத்துநாள் ஆய்விட்டது.

மார்லோ:—இந்த வீட்டில்தான் எதுகேட்டாலும் இல்லாமற்போய்விடுகிறதே. எப்படியிருக்கிறதென்று கொஞ்சம் ருசிபார்ப்பதற்காக உன் அதரத்தின் அமிர்தம் வேண்டுமென்று கேட்டேன் என்று வைத்துக்கொள், அதுவும் கிடைக்காமற் போய்விடுமோ!

காதெரின்:—அமிர்தம்! அமிர்தம்! அந்தச்சரக்கிற்கு இப்பக்கங்களில் தேவையிருப்பதில்லை. அது என்ன, அயல்நாட்டுச் சரக்கா? நாங்கள் ஒன்றும் அயல்நாட்டுச் சரக்கு வைத்துக்கொள்வதில்லை.

மார்லோ:—இல்லை, இல்லை! சுத்தமான சுதேசிச்சரக்குத்தான்.

காதெரின்:—அப்படியானால் எனக்குத் தெரிந்திருக்கவேண்டுமே. நான்பிறந்த இந்தப் பதினெட்டுவருடமாகக் கேள்விப்பட்டதில்லையே!

மார்லோ:—என்ன! பதினெட்டு வருடமா, குழந்தாய்! ஆனால், நீ பிறப்பதற்கு முன்னாலேயே இந்த வீட்டில் வேலைக்கு அமர்ந்துவிட்டாய் என்றல்லவோ எண்ணவேண்டும். உன் வயதென்ன?

காதெரின்:—ஐயா, என் வயதை நான் சொல்லப்படாது. மாதர்களுக்குத் தேதி இல்லை என்று சொல்வார்கள்.

மார்லோ:—இந்தத் தூரத்திலிருந்து பார்க்கும்போது உனக்கு வயது நாற்பதிற்குமேல்அதிகம்இராதென்று தோன்றுகிறது. (சமீபமாக வந்து) கிட்டவந்தால் அவ்வளவு காட்டவில்லை. (இன்னும் நெருங்கிவந்து) நெருங்கிவந்தால் சில பெண்கள் இன்னும் இளையவர்களாய்த் தோன்றுகின்றனர்; முற்றிலும் நெருங்கிவிட்டாலோ...(அவளை முத்தமிடப் பார்க்கிறான்).

காதெரின்:—ஐயா, தயவுசெய்து தூரவே இருங்கள். நானென்ன; மாடா குதிரையா, பல்லைப்பார்த்து வயதுசொல்ல!

மார்லோ:—பெண்ணே, இப்படி என்னைக் கொடுமை செய்யப்படாது. இவ்வளவு தூரத்தில் என்னை நீ நிறுத்தி வைப்பாயானால், உனக்கும் எனக்கும்உறவு ஏற்படுவது எப்படி?

காதெரின்:—உங்களோடு உறவு வேண்டுமென்று யார் சொன்னது? நான் சொல்லவில்லையே. சற்று முன்னே நீங்கள் காதெரினைச் சந்தித்தபோது அவளை இவ்வளவு ஆர்வங்கொண்டு ஆரவாரத்துடன் நடத்தவில்லையே. அவளுக்குஎதிரில் அடியோடு அழிந்துவிட்டீர். குனிந்ததலை நிமிரவில்லை. நியாதிபதியின் முன் குற்றவாளியைப் போலல்லவோ நின்றிருந்தீர்.

மார்லோ:—(ஒருபுறமாய்) அடேயடே, கண்டுபிடித்துவிட்டாள் இவள், நிச்சயம். (அவளைப்பார்த்து) அவளுக்குப் பயந்தா நான் அப்படி இருந்தேனென்று எண்ணுகிறாய், நீ, குழந்தாய்? ஹ! ஹ! ஹா! அந்த ஒன்றரைக்கண் அவலக்ஷணத்திற்கு முன்னா, சிசீ! என்னை நீ இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. அவளைப்பரிகாசம்பண்ணிக்கொஞ்சம்இறக்கினேன்; இருந்தாலும் அதிகக் கடுமையாக அவளை நடத்த எனக்கு மனம் வரவில்லை. யாரையுமே நான் கடுமையாக நடத்தமாட்டேன்.

காதெரின்:—ஓகோ! ஐயா, அப்படியானால் நீங்கள் மாதர்களுக்கிடையே மிகவும்பிரயுமுடன் பாராட்டப்படுகிறீர்களென்று தெரிகிறது.

மார்லோ:—ஆம், என் கண்ணே, என்னிடத்தில் அதிக ஆசை அவர்களுக்குஉண்டு. ஆனாலும், என்னை இப்படிச் சுற்றிக்கொண்டுதிரிவதற்கு என்னிடத்தில் என்ன விசேஷமிருக்கிறதாக அவர்கள் எண்ணுகிறார்களோ, அது எனக்கே தெரியவில்லை. மாதர் கிளப்பில் என்னை அருமையான 'கிலுகிலுப்பை' என்றுஅழைப்பார்கள். 'கிலுகிலுப்பை' என்பது, குழந்தாய், என் உண்மையான பெயர் அல்ல; அவர்கள் என்னை அப்படிஅழைப்பது வழக்கம் என்றுதான் சொல்கிறேன். என்பெயர், ஸாலொமன்ஸ், அன்பே, ஸாலொமன்ஸ், உன் ஊழியன்.

காதெரின்:—இருங்கள், ஐயா, இருங்கள். என்னை நீங்கள் அறிமுகம் செய்துகொள்ளவேண்டுமென்று சொன்னது போக, உங்கள் 'கிளப்பை' அல்லவோ எனக்கு அறிமுகம் செய்துவைக்கிறீர்கள். உங்கள் மீது அவர்களுக்கெல்லாம் அதிக ஆசையென்றுசொல்லுகிறீர்கள்? அது மிகவும் உல்லாசமான இடமாக இருக்கவேண்டும்.

மார்லோ:—ஆம், சீட்டாட்டமும், சாப்பாடும், கிழவிகளுமாகச் சேர்ந்து செய்யக்கூடிய உல்லாசமெல்லாம் அங்கே காணலாம்.

காதெரின்:—நீங்களோ அவர்களுடைய அருமையான, கிலுகிலுப்பை—ஹ! ஹ! ஹா!

மார்லோ:—(ஒருபுறமாய்) என்னடா விது! இந்தக் குட்டி பொல்லாதது போலிருக்கிறது. எல்லாம் தெரிந்தவளாயுமிருக்கிறாள், (அவளைப்பார்த்து) என்ன சிரிக்கிறாய் நீ!

காதெரின்:—தங்கள் வேலைகளையாவது குடும்பத்தையாவது கவனிப்பதற்கு அவர்களுக்கு எங்கே நேரம் இருக்கின்றதுஎன்பதை நினைக்க எனக்குச் சிரிப்பு வருகிறது.

மார்லோ:—(ஒருபுறமாய்) நல்லவேளை, என்னைப் பார்த்துச் சிரிக்கவில்லை இவள். (அவளைப்பார்த்து)

m211,N28KN
N34.2.23
199173

ஆனால் நீ வேலை அதிகம்செய்வதுண்டோ, குழந்தாய்?

காதேரின்:—நானா? நான் ஓயாமல் ஏதேனும் வேலை செய்தவண்ணமாகவே இருப்பேன்.

மார்லோ:—அதனால்தானோ, பாவம், உன் கைகள் இவ்வளவு சிவந்துகிடக்கின்றன? பொறுக்கமாட்டாத் தீயை மூட்டிவிடுகின்றதே, இவ்வழகு—(அவள் கையைப்பற்றி இழுக்கின்றான்)—சீ! சி!! இங்கும் வந்துவிட்டானா வீட்டுக்காரன்! எல்லாம் என் பழைய துர் அதிர்ஷ்டம்தான். ஒரு ஏஸ் பிடித்தால் மூன்று ஏஸ் வெட்டிக்கொடுத்துவிடுகிற என் சீட்டாட்டம் போலவே இதுவும் முடிகிறது. (மார்லோபோகிறான்)

[ஹார்ட்காஸல் வந்து திடுக்கிட்டு நிற்கிறார்.]

ஹார்ட்:—இப்படியா பெண்ணே! இப்படித்தானோ உன் அடக்கமுள்ள காதலன்? மிகவும் தாழ்மையோடு தூரநின்று, தலைகுனிந்தவண்ணமாய் உன்னை வியந்திருந்தவன் இவன்தானல்லவா? காதெரின், காதெரின், உன் தந்தையைஇப்படிவஞ்சிக்க உனக்குவெட்கமாக இல்லையா?

காதேரின்:—அப்பா, இன்னமும் இவன், நான் முன் சொன்ன அந்த அடக்கமுள்ள புருஷன்தான். நீங்களும்என்னைப்போல் அது நிச்சயமென்றேகொள்வீர்.

ஹார்ட்:—அடதெய்வமே! அவன் அயோக்கியத்தனம் ஒட்டுவா ரொட்டியும் போலிருக்கிறதே! உன் கையை அவன் இப்பொழுது பிடித்திழுப்பதைஎன் கண்கள் கண்டது பொய்யா? நீயோ அவனை மானமும் மரியாதையும் உள்ளவன் என்று பேசுகிறாய்.

காதேரின்:—அவர் மரியாதையுள்ளவரே என்றும் அவரிடம் காண்கின்ற குற்றங்கள் வரவர நீங்கிவிடக்கூடியன வென்றும், அவர் யோக்யதை வயதாகவாக வளரும் என்றும் நான் இப்பொழுதே ரூபிப்பேனானால் நீங்கள் அவரை மன்னித்துவிடுவீர்களல்லவா!

ஹார்ட்:—இந்தப் பெண் இப்பொழுதே என்னைப் பைத்தியகாரனாக்கிவிடுவாள், அவ்வளவுதான்— நீ சொன்ன தொன்றையும் ரூபிக்க முடியாது. எனக்கிதனில் இனியொரு சந்தேகமும் இல்லை. அவன் இந்த வீட்டிற்குள் நுழைந்து இன்னும் மூன்று மணி நேர மாகவில்லை, இதற்குள்ளேயே என் சுதந்தரங்களையெல்லாம் அபகரித்துக்கொண்டுவிட்டானே. அவனுடைய துணிவையும் துடுக்கையும் நீ விரும்பலாம், விரும்பி அதுதான் அடக்கம் என்று அழைக்கலாம். ஆயினும், பெண்ணே, என்னுடைய மருமகனுக்கு இருக்கவேண்டிய குணங்களோ முற்றிலும் வேறு.

காதேரின்:—அப்பா, கொஞ்சம்பொறுத்திருங்கள், பொழுதுவிடிவதற்குள் நீங்கள் நம்பும்படி நான் ரூபித்துவிடுகிறேன் பாருங்கள்.

ஹார்ட்:—பொழுது விடிகின்ற வரையிலா; அழகு அழகு! இன்னும் ஒருமணி நேரத்திற்குள்ளே அவனை இந்த வீட்டைவிட்டுத் துரத்திவிட நான் நிச்சயித்திருக்கிறேன்.

காதேரின்:—நல்லது, அந்த ஒரு மணி நேரத்திற்குள்ளேயே ரூபித்துவிடுகிறேன், பாருங்கள்.

ஹார்ட்:—நல்லது, ஒருமணி நேரம் உனக்குத்தந்தேன். ஆனால், என்னோடு ஒன்றும் அற்பத்தனமான விளையாட்டு வைத்துக்கொள்ளாதே. எல்லாம் யோக்கியமாகவும் வெளிப்படையாகவும் இருக்கவேண்டும் தெரியுமா?

காதேரின்:—உங்களுடைய கட்டளையை நிறைவேற்றுவதே எனக்குப் பெருமையாக மதித்திருப்பவள் நான் என்பதை நீங்கள் அறிவீர். என் கடமையே என்னுடைய கருத்திற்கும் இசைந்ததாயிருக்கும்படி உங்கள் அன்பு என்னை வசப்படுத்தியிருக்கிறது.

[போகின்றனர்.]

மூன்றாம் அங்கம் முற்றிற்று.

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

6-ம் பத்து. 7-ம் தசகம்.

[327 வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பாசுரம்

ஊரு நாடு முலகமுந் தன்னைப்போ
லவனுடைய
பேருந் தார்களு மேபிதற்றக் கற்பு
வானிடறிச்
சேரு நல்வளஞ் சேர்பழனத் திருக்கோ
ளூருக்கே
போருங் கொலுரை யீர்கொடி யேன்கொடி
பூவைகளே

பதக் குறிப்புக்கள் :—பேருந் தார்களும்-திருக்கோளூர் எம்பெருமானது திருநாமங்களையும் அவன் அணியும் பூமாலைகளையும். (தார், பகவானின் திருச் சங்கம் சக்கரம் முதலான மற்ற திருச்சின்னங்களுக்கும் உபலக்ஷணம்) "கற்பு வான் இடறி"-வான் - சிறந்த, கற்பு- பெண்பாலருக்குள்ள அச்சம் அடக்கம் நாணம் முதலாயகுணங்களின் இயல்பு, இடறி - மிஞ்சித் தாண்டி - இங்கு இப்பிராட்டி துணையில்லா தனியே பகவானை தன் நாயகனை முறைதப்பித் தேடிப்போக நேரிட்டிருப்பதைத் தாய் சுட்டி வியஸனிக்கிறபடி. "போருங்கொல்"-"திரும்பிவருவாளோ" என்று இப் பிராட்டி வளர்க்கும் பூவைகளைக் கேட்டபடி. கொடியேன்-என் பாவத்தால் என் பெண்ணென்னையும் உங்களையும் விட்டு அழுதுகொண்டு போயினாள். கொடி - பெற்ற பெண்.

"போருங்கொல்" - பாருங்கொல், மோனைக்காகப் "போருங்கொல்" என்றுநிற்கிறது.-பாருகை-வருகை-சென்றவள் திரும்பி "வருகையைக்" குறிக்கிறது.

பொழிப்புரை:-பகவானுடைய உத்கிருஷ்டத்தையும் நாமத்தையும் திவ்விய சின்னங்களையும் அதிக ஆசையோடு கூப்பிடுகின்ற தன்னுடைய தீன சுவரத்தைக் கேட்டு ஊரும் நாடும் உலகமும் தான் சொல்வதுபோலே பிதற்றிக் கூப்பிடும்படியாக அழைக்கிற இந்தப் பேதை தன் வியஸநம் பொறுக்கமாட்டாதே அக்கிரமமாய்த்தான் பெண்என்றதைமறந்து தனியே லஜ்ஜையும் மானத்தையும் துறந்து தன்னூர் விட்டு நல்லவளம்சேர்ந்த திருக்கோளூருக்கேபோய்ப்புகும் பாக்கிய ஹீனமான என் பெண் (அவளால் வளர்க்கப்பட்ட பூவைகளே!) உங்களைநினைத்தாகிலும் மொருக்கால் வருமோ வென்று இப் பிராட்டியின் தாய் கேட்கிறாள்.



3-ம் பாசுரம்

பூவை பைங்கிளி கள்பந்து தூதைபூம்
புட்டில்கள்
யாவையுந் திருமாறிரு நாமங்க ளேகூவி
யெழுமென்
பாவை போயினித் தண்பழனத் திருக்கோ
ளூர்க்கே
கோவைவாய் துடிப்ப மழைக்கண்
ணொடென்செய் யுங்கொலோ.

பதக் குறிப்புக்கள் :—தூதை - சூதாட்டக்காரரும் மற்றவரும் ஜயாபஜய நிச்சயத்திற்கு உபயோகித்தாடும் கருவி-பகடை. பூம் புட்டில்கள்-பூக்குடலைகள்.

உரை:—பூவை பைங்கிளி...யாவையும் திருமால் நாமங்களே கூவி—நாட்டிலுள்ள மற்றப்பெண்கள் விளையாட்டுநிமித்தம்பூவை, பச்சைக்கிளி, பந்து தூதை முதலானவைகளை வைத்துக்கொண்டு ஆடிக்களிக்க என் பெண்ணுக்கோ இவைகளை இப்போழ்து உபகரணமாகக்கொண்டு விளையாடுகின்றஆட்டத்தில்மனம் செல்லுகிறதில்லை. மற்றைய பெண்களுக்கு இவ் வாட்டங்களிலுள்ள உருசி இவளுக்குப் பகவானின் திருநாமம் சொல்வதிலேதான் உளது. என்ற "எழும்"-உற்சாகிக்கும்-என்று தாய் கூறுகிறாள். இப்படிக்குற்றவள் திருக்கோளூருக்கு ஏன் போகவேண்டும்? இருந்த விடத்தில் பகவானின் திருநாமங்களைச் சொல்ல அடுக்காதா? அந்த க்ஷேத்திரத்தில்மட்டும் வாக்கால் செய்யும் துதியும் மனஸால் செய்யும் பஜநமுந் தவிர வேறே என்ன அதிகப்படி லாபமுண்டாகும்? இப்படியிருக்க என் பேதை எண்ணமிட்டுப்போனது ஒன்றும் கிடைக்காமல், 'கோவைவாய்துடிப்ப' மன வேதனையால் கீழ் உதடு துடித்துக்கொண்டிருக்க (மழைக் கண்ணொடு) மழைபோல் கண்ணீர்விட்டழுதுகொண்டு 'என் செய்யுங்கொல்லோ" என்ன வேதனைப் படுகிறாளோ? ஸ்வாபதேசத்தில், ஆழ்வார் பகவானின் சிந்தையிலும் திருநாமஜெபத்திலுமெப்பொழுதுமூன்றியிருப்பவர் திருக்கோளூருக்கு உத்தேசித்துச்சென்ற பிரயாணம், பகவானின் திருக்கண்கள் திறந்து கடாக்ஷிப்பது ஆலிங்கனம் ஸம்பாஷணம் முதலானது செய்வது ஆகிய இச்சம்பவங்கள் தமக்கு வாய்கும்என்ற ஆசையை முன்னிட்டே. ஆயினும் ஆழ்வாருக்குஇது கிடைக்காதென்பது ஆப்தர்களுக்குமுன்பே தெரிந்த விஷயமே. ஐயோ! இவை கிட்டாமல் ஆழ்வார் பரிதபிக்கப் போகிறாரே என்ற அன்பர்களின் மனக்கிலேசம் இது.

குறிப்பு:—ஒரு பயனுங்காணாமல் தன்பெண் திருக்கோளூருக்குச் செல்லுமோ வென்றால்—'கிடைத்தாலோ'வென்ற ஆசைதான் காரணம்.

---

4-ம் பாசுரம்

[கொலோ
கொல்லையென்பர்கொலோகுணமிக்கனளென்பர்
சில்லைவாய்ப்பெண்டுகளயற்சேரியுள்ளாருமெல்லே
செல்வமல்கியவன்கிடந்ததிருக்கோளூர்க்கே
மெல்லிடைநுடங்கவிளமான்செல்லமேவினளே

இப்பாசுரத்திற்கு ஆறாயிரப்படிஉரை வெகுபொருத்தமாயிருப்பதால் அதை இங்கு வரைவோம். "ஐசுவரியத்தால் எல்லா ஸம்பிரமங்களும் கூடிச் சேர்ந்திருக்கும் திருக்கோளூரில் எம்பெருமான் கண்வளர்ந்தருளுகின்ற கோவிலுக்கு ஒன்றுமறியாத இள மான் போன்ற என் பெண் மெல்லிடை நுடங்கப்போனாள் மரியாதை கடந்தாளென்று உலகத்தார் இவளுக்குக் குற்றமாகச் சொல்வார்களோ; அன்றியே திருக்கோளூரிலே ஒருத்திக்கு உள்ள ஆசை யிருக்கும்படியென் என்று ஆச்சரியப்பட்டு மஹாகுணமாகச் சொல்வார்களோ? அங்ஙனே குணமாகச் சொல்லுகை ஸம்பவிக்குமோ? பிறரிடத்திலுள்ள உயர்ந்த நற்குணத்தையும் தோஷமாகவே காண்கிற உலகத்தார் ஸ்வபாவம் என்னென்று இன்னாதாகிறாள்.

குறிப்புக்கள்:—'எல்லே' என்பது ஐயோ, என்று பொருள். உலகத்தவர் நல்ல விஷயங்களிலும் பழி சொல்லக் காரணம்தேடுகிறார்களே! நான் என் பெண்ணைப் பிரிந்துபடும் துயரம் போதாதா? பிறரும் நிந்திக்க இடமாய்விட்டதே என்று 'இன்னாது' அப்பிரியம் வெறுப்படைகிறாளென்று உரை.

II. கொல்லை - உலகமரியாதையைக் கடந்தவள். இது அபூர்வபதம். இவளையே 'குருதி' யென்று மற்றொரு இடத்தில் குறிக்கின்றார்.

III. சில்லைவாய்ப் பெண்டுகள்:-சிலுகு (கலகம்)என்ற பதம் செய்யுள் எதுகைக்காகச்'சில்லை'என்று திரிந்திருக்கிறது. சில்லைவாய் - எப்போதும் கலகம் அல்லது சண்டை வார்த்தைகளைச்சொல்லும் பெண்டீர். இவர்கள் உள்ளூரிலுள்ள பேர்வழிகள். அயல் சேரியிலுள்ளாரை வேறாகக் குறிக்கின்றார்—'சில்லை என்கிற சொல்லுக்கு 'இழிவு' என்று பொருளுண்டு. பிறரைத் தூஷணை செய்யும் பெண்டிர்-'செல்லை' என்ற சொல்லுக்குத் 'தூர்த்தை' அதாவது கெட்டவள் என்ற ஒரு அர்த்தமுண்டு; இப்படியும் கொள்ளலாம்.

---

5-ம் பாசுரம்

மேவிநைந்துநைந்துவிளையாடலுறாளென்சிறுத்
தேவிபோயினித்தன் திருமாறிருக்கோளூரிற்
பூவியல்பொழிலுந் தடமுமவன்கோயிலுங்கண்டு
ஆவியுள்குளிர்வெங்ஙனேயுகக்குங்கொலின்றே.

உரை :—என்சிறு தேவி - வெகு வாலிபத்திலே தெய்வத் தன்மை பொருந்திய என் பெண். மேவி பகவானை நெஞ்சாலே அடைந்து, நைந்து நைந்து - எம்பெருமானை யாசைப்பட்டுஅவனைப் பெருமையாலே மனம் நொந்து நொந்து,விளையாடலுறாள் - மற்ற இதர சமவயதுள்ள பெண்களோடு ஆடி நேரம்கழிக்க மனமில்லாதவளாயினள். இனி - இந்த ஊரைவிட்டுப் போனவள் இனிமேல், தன் திருமால் - இலக்மிக்கு எப்படி வசியமானானோ, அவ்வண்ணமே இப்பிராட்டிக்கும் வசப்பட்டவனாய்த் திருமால் இருக்கவேண்டியவனாதலால் "தன்" திருமால் என்ற பிரயோகம்-திருக்கோளூரில், பூவியல் பொழில் - எப்போழ்தும் பூக்களால்விளங்கும்உத்தியானவனங்களென்ன, கோயில் - திருக்கோவில் என்ன, கண்டு, ஆவியுள் குளிர-பகவானிடத்துள்ள வேட்கைபற்றி யடைந்த தாபமெல்லாம் தீர்ந்து அகமலர்ச்சி யேற்பட, எங்ஙனே - எவ்விதமாய், இவள் 'உகக்குங்கொல்' சந்தோஷப்படுவாளோ? அதை நான் கண்ணால் காணக்கொடுத்துவைக்கவில்லை யென்று தாய் நோவுபடுகிறபடி. தாய் தன்பெண் உகப்படைவாளென்று ஊஹித்துப்பேசுகிறாள்.

# மதுரைக் கோவை

[350-வது பக்கத் தொடர்ச்சி]

## XXV. வரைபொருட் பிரிவு

வரைபொருட்குப் பிரிகின்றமை தலைவன் தோழிக் குரைத்தல்

சீறுந் தழற்சுரஞ் சென்றணங் கேநுமர்
சிந்தைசெய்து
கூறும் பொருளைத் துங்கொணர் வேன்கொடிக்
கூடைமண்ணு
மாறும் படச்சுமப் பார்மது ரேசர்
வரையில்வல்லி
யாறும் பரிசுரைத் தாற்றுவிப் பாய்சென்
றருகிருந்தே. 309.

தோழி தலைவனை நீயே கூறென்றல்

குருநாண் மலர்த்தொடை யார்சொக்க நாயகர்
கூடற்செம்பொன்
றருநா ணுமருவக் குந்திரு நாளத்
தமனியங்கொண்
டொருநா ளெனினும் பிரியே னெனவு
முரைத்தண்ணனீ
வருநாளுங் கூறிலன் றேதெளி வாளுன்
மடமயிலே. 310.

தலைவன் றோழியோ டாற்றுவித்தலரிதெனப் பிரிதல்

விரியுஞ் சடைமுடி வெள்ளிமன் றுளர்பொன்
மேருவெற்பிற்
சரியுஞ் சுரிகுழற் றையனல் லாய்மெய்
தழுவியன்பு
புரியும் பொழுதுகை சற்றே நெகிழப்
பொருதவல்லி
பிரியும் பரிசுரைத் தாலெங்ங னேயுயிர்
பேணுவதே. 311.

தலைவன் வரைபொருட்குப் பிரிந்தமை தோழி தலைவிக் குரைத்தல்

போகப் புளக முலைப்பொருப் பாளும்
புரவலரின்
றேகத் துணிந்தகன் றுரணங் கேதிசை
யெட்டுமெட்டி
மாகத் தளவும் புகழ்மது ரேசர்
வரையினிமா
தாகத் தளவுந் தனந்தரு மாறு
தனிநெறியே. 312.

தலைவி புலம்பல்

வீறுக்கி நின்று வியனுடு வோர்வெள்ளி
வெற்பிலிங்ங
னூறுத்துயர் கொண் டொழியுநெஞ் சேபொரு
ளாதரிப்பார்
பேறுக் குவதன்றி யின்றுநண் பாளர்
பிரிவுநம்பால்
மாறுக் கலவி தருவதென் றுலென்
வருந்துவதே. 313.

பருவங் கண்டிரங்கல்.

தீவந்த செங்கைத் திருவால வாயர்
சிலம்பிலிள
வேய்வந்த வெள்வளைத் தோளணங் கேகடல்
வெள்ளமொண்டு
தோய்வந் ததிர முழங்கியந் நாள்வந்து
சொன்னகொண்டல்
போய்வந்த தின்னமும் வந்திலர் காணம்
புரவலரே. 314.

தோழி தலைவன் வரவுரைத்தல்.

வேர்வந் தணிந்த திருநீ றிலங்க
வியனடஞ்செய்
வார்வந்து தங்க வனமுலைப் பாகர்
மதுரைவெற்பிற்
கார்வந்த தென்று கலங்காகொ ளுன்னைக்
கலந்தகன்றார்
தேர்வந் ததுதிரு வேயினி வேறென்கொல்
சிந்தனையே. 315.

தலைவி மணமுரசொலி கேட்டு வருந்தல்.

வேலிக் கிடைமள்ளர் செஞ்சாலி முற்றி
விளைவளவுஞ்
சூலிக் கெறிமது ரைச்சொக்கர் மால்வரைத்
தும்பிவென்றம்
பாலிக்கும் வேலவற் கோவன்றி யேயையர்
பாலவற்கோ
வாலிக்கு மிந்த முரசெவற் காகவின்
றார்க்கின்றதே. 316.

தோழி நிதிவரவுரைத்துத் தலைவியைத் தெளிவித்தல்.

முறைநின் றடுகரி முன்னின்ற காளைக்கு
முன்றிலினின்
றறையுங் கடிமுர சாரணங் கேநச்
சராவுமதிக்
குறையுந் திகழ்முடி யார்கூட லுயகர்
கூடலர்தந்
திறையுங் கொணர்ந்துதந் தாரிது காணுன்
றிருமணமே. 317.

வரைபொருட் பிரிவு முற்றும்

**களவு முடிந்தது**

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"அல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனா மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கேட் ம.ட.டி.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்த்த திருமணத்தூள் காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக் ஜுரம் எவ்வித ஜுரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]



# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

## IV. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஸ்தோத்திரங்கள்.

[332-வது பக்கத் தொடர்ச்சி]

3. இராகம்—புந்நாகவராளி.] [தாளம்—ஆதி.

**பல்லவி**

ஹரிஹரி நீயொக்க திவ்ய பாதாரவிந்த மிய்யவே....................................(ஹரி)

**அநுபல்லவி**

தாநு கனுகு போக பாக்யமெல்லநு—தத்யமுகாது ஸாமீ ஸ்ரீ க்ருஷ்ண.............(ஹரி)

**சரணம்**

1. ஸநக ஸநந்தன ஸ்ரீநாரத சுகார்ஜுந முநுலெல்ல நுதிம்சு (ஹரி)
வநஜ நயன ப்ரம்ஹாதி ஸங்க்ரந்தந—கநுலெல்ல ஸேவிம்சு.........................(ஹரி)

2. முநுவேத புராணாகம சாஸ்த்ர—வித்ய லயந்து சரிம்சு
கந ஸமநீல நிரஞ்ஜந நிர்குண—நிகரமுக த்யாகராஜு பாவிம்சு..................(ஹரி)

### பொருள்

ஹரிஹரி - ஹரி ஹரீ! நீ யொக்க திவ்ய பாதாரவிந்தமு இய்யவே - உன்னுடைய திவ்விய பாதாரவிந்தங்களை எனக்குத் தந்தருள்வாயாக.

ஸ்ரீ க்ருஷ்ண - ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியே! தாநுகனுகு- பூமியிலிருக்கிற, போகபாக்யமு எல்லநு - போகபாக்கியங்களெல்லாம், தத்யமு காது ஸாமி - உண்மையாக மாட்டா என் ஐயனே!

ஸநக ஸநந்தன ஸ்ரீநாரத சுக அர்ஜுந முநுலு எல்லங்- ஸநகர் ஸநந்தனர் ஸ்ரீ நாரதர் சுகர் அர்ஜுனன் முதலிய முனிவர்களனைவரும், நுதிம்சு - கொண்டாடி ஸ்தோத்திரம் செய்கிற, வநஜநயன - செந்தாமரைக் கண்ணனே, ப்ரம்ஹாதி ஸங்க்ரந்தன கநுலு எல்லன் - பிரமன் முதலான தேவதைகளும் பெரியோர்களும், ஸேவிம்சு - தரிசித்துக் கொண்டிருக்கிற, (ஹரிஹரி.........இய்யவே - ஹரிஹரி.........தந்தருள்வாயாக.)

முநுவேத புராண ஆகம சாஸ்த்ர வித்யல யந்து - பிரதானமாய் வேதங்கள் புராணங்கள் ஆகமங்கள் சாஸ்திரங்கள் முதலிய வித்யைகளிலெல்லாம், சரிம்சு - சஞ்சரித்துக் கொண்டிருக்கிற, கந ஸமநீல - மேக ச்யாமல ரூபனே! நிரஞ்ஜன - பாபரஹிதனே! நிர்குண - நிர்க்குண ஸ்வரூபனே! நிகரமுகத்யாகராஜு பாவிம்சு(ஹரிஹரி)- பக்தியுடன் தியாகராஜன் தியானித்துக் கொண்டிருக்கும் (ஹரிஹரி), (நீயொக்க...........இய்யவே - உனது .........தந்தருள்வாயாக.)

### புந்நாகவராளி ராகலக்ஷணம்

இந்த இராகம் 72 மேளகர்த்தா முறையின்படி 8-வது கர்த்தா ராகமான (ஹநும) தோடியில் ஜந்யம். இது நிஷாதாந்திய ராகம். (தக்குஸ்தாயி நிஷாதத்திலிருந்து மத்யஸ்தாயி நிஷாதம்வரையில் மட்டுமே ஸஞ்சாரமுடைய ராகம். சில நூலாசிரியர்கள் இதன் சஞ்சாரம் தக்குஸ்தாயி நிஷாதமுதல் மத்யஸ்தாயி தைவதம் வரைக்குமேயுள்ளதென்று அபிப்பிராயப் படுகின்றனராயினும், பிரசித்த வாக்கேயகாரகர்களின் கீத கீர்த்தனாதிகளில் மத்யஸ்தாயி நிஷாதம் வரையில் சஞ்சாரங் காணப்படுகின்றது. அநுபவத்திலும் இவ்வாறே காணப்படுகின்றது. நிஷாதத்தைப் பயன்படுத்தாமற் பாடுவதனால் இவ்விராகத்தின் களையே புலப்படாது. ஆகவே இது நிஷாதாந்தியமென்பதே அறிஞர் துணிபு. தக்குஸ்தாயி நிஷாதமும் மத்தியஸ்தாயி காந்தாரமும் தீர்க்கமாகப் பிடிக்கப்படுவதனாலும், மத்தியஸ்தாயி தைவதத்தைக் கைசிகி நிஷாத சம்பந்தமுடையதாகப் பிடிப்பதனாலும் இந்த ராகத்தின் களை புலப்படுகின்றது. "கரிகா" என்ற பிரயோகத்தில் சதுச்ருதி ரிஷபம் பேசுகிறதென்றும் ஆகையால் இது பாஷாங்க ராகமென்றும் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர். எப்போதும் பாடத்தக்கது.

ஆரோஹணம்:—நிஸரிகமபதநீ.
அவரோஹணம்:—நிதாபமகாரிஸநீ.

## ஸ்வர ஸாஹித்யம்

### ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநீ—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீகம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

குறிப்பு:—இக்கீர்த்தனம் சவுக்க காலத்திற் பாடப்படவேண்டும்.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ; * ஸரி - காகா - காகா - கரிகா | ; - ஸரி கா ரீ | ஸா ; - ஸரிநீ | \|\| |
| ; * ஹரி - ஹரி - நீ . - யொ.க்க | ; - தி. வ்யபா | தா ; - . . . | \|\| |
| ; * ஸரி - காரீ ஸா , - ஸா ஸா | கமபா ; - பம | கா ரீ , ஸா ; | \|\| |
| ; * அர - விந்த . ; - மிய்ய | வே. . ; - . . | . . ; . ; | \|\| |
| ; * ஸரி - காகா - காகா - கரிகா | ; - ஸரி கா ரீ | ஸா ; - ஸரி நீ | \|\| |
| ; * ஹரி - ஹரி - நீ . - . . . | ; - தி .வ்யபா | தா ; - . . . | \|\| |
| ; * ஸரி - காரீ ஸா ; - ஸா ஸா | பதநிதாப - பம | கா ரீ ஸா ; | \|\| |
| ; * அர - விந்த . ; - மிய்ய | வே. . . - . . | . . . ; | \|\| |

அநுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| ; * பபா - பபா - பாமா - பமகரி | கா - கமபா பா | பா பா ; - த நி த ப | ‖ |
| ; * தர - நுக - லுக - போ. . . | க - பா . க் ய | மெல் ; - ல . நு . | ‖ |
| ; * த நி தா பா - பா, ம - தா பா | பமகா ; - பம | கா - ரீ ஸா நீ | ‖ |
| ; * த த் . ய மு - கா, . - து ஸு | மி . . ; - ஸ்ரீ. | . - க்ருஷ்ணு. | ‖ |
| ; * | | | |
| ; * (ஹரி ஹரி) | | | |

சரணம்

| | | | |
|---|---|---|---|
| ; * ஸரி - காகா - கா ; க ரி கா | ரீ - க மா க ரீ | ஸா ஸா - ஸா ஸா | ‖ |
| ; * ஸந - க ஸ - நந் ; த . ந | . - ஸ்ரீ . நா . | ர த - சு கார் | ‖ |
| நீ * ரிகாரிஸா - ஸா ; ஸா நீ | ; - ஸ ரி கா ரீ | ஸா ; ; ; | ‖ |
| * ஜுநமுநு - லெல் ; ல நு | ; - திம் . . . | சு ; ; ; | ‖ |

"வநஜ நயன............ஸேவிம்சு"—அனுபல்லவி போல் பாடவேண்டும்.

இரண்டாவது சரணத்தை முதற்சரணத்தைப் போலவே பாடவேண்டும்.

---

# வர்த்தமானம்

**விவாக ரத்து:**—பார்ஸிலோனுவில் ஸினுர் மரியானே என்பவருக்குக் கலியாணமாகிப் பதினேரு ஆண்டுகள் ஆகியும் தமது மனைவியின் உண்மையான பெயர் தெரியவில்லையென்ற காரணத்தால் விவாகரத்துசெய்ய வேண்டுமென்று வழக்குத் தொடுத்திருக்கிருர்.

* * *

**75,000 பவுன் அபராதம்:**—சென்ற மாதத்தில் போர்ட்ஸ் மவுத் துறைமுகத்தில் புகையிலையைக் கள்ளத்தனமாக இறக்குமதி செய்ததற்காகச் சிகரெட்டு முதலாளி ஒருவருக்கு 75,000 பவுன் அபராதம் அல்லது 6 மாதம் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு முன் எதிரிக்கு இதே குற்றத்திற்கு 15,000 பவுன் அபராதம் விதிக்கப்பட்டது. 75,000 பவுன் அபராதம் விதிப்பது இதுவே முதல் தடவை யாகும்.

* * *

**காலஞ் சென்ற தாயின் காதல்:**—பிரான்ஸ் தேசத்தில் அமீன் என்ற ஊரில் மில்லி லோக் என்ற பெண் சென்ற நாலாண்டுகளுக்கிடையில் பன்னிரண்டு ஆடவர்களை மணப்பதாக உறுதிசெய்து தனது காலஞ் சென்ற தாயார் கனவில் சொல்லியதைக் கருதி அவர்களை யெல்லாம் விட்டுப் பதின் மூன்ருவதாக ஓர் ஆடவனைத்தேடி மணந்துகொண்டாள். அவள் தாயார் அவள் பிறந்த சில நாளில் இறந்து போனுள். அவள் மரணத் தறுவாயில் அங்குக் கூடி யிருந்தவர்களை நோக்கி மரணத்திற்குப் பின் வாழ்க்கை உண்டென்பதில் உண்மை யிருந்தால் தான் தனது மகளுக்குக் கஷ்ட காலங்களில் வந்து உதவி புரிவதாகச் சொன்னுளாம். மகள் கலியாணம் முடிவு செய்தலெவ்வொரு சமயத்திலும் அவள் தாயார் கனவில் வந்து அதனை மறுத்துவந்தாளாம். கடைசியாக 13-வது மனிதன் விஷயத்தில் அவள் தாயார் புன்னகையுடன் வந்து நீ சந்தோஷமாயிருப்பாய் என்று சொல்லி வாழ்த்திச் சென்ருளாம்.

* * *

**அற்புதப் பவுண்டன் பேனு:**—அமெரிக்காவில் அற்புத பவுண்டன்பேனு கண்டு பிடிக்கப்பப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு எழுதும்போதே அது எழுதும் எழுத்துக்களின் எண்ணிக்கைகளைக் காட்டிக் கொண்டே போகிறது. அந்தப் பேனுவில் ஓரளவுக்கு மை நிரப்பினுல் சராசரி 7000 வார்த்தைகள் ஒரே சமயத்தில் எழுதலாம். அத்தனை வார்த்தைகளை எழுதுவதற்கு ஏற்ற படியே அதில் மை ஊற்றப்படுகிறது. பேனுவின் மைக் குழாய் பளிங்கு போல் இருக்கின்றது. மைக் குழாயில் 1000 வார்த்தைகளைக்குறிக்கும் ஒரு குறி வீதம் 7 பாகங்களைக் காட்டும் குறிகள் அதில் இருக்கின்றன.

* * *

**பெண் பகிஷ்காரம்:**—பாலஸ்தீனத்தில்ஜாபாவுக் கருகாமையில் ராம்லே ஊரிலுள்ள முஸ்லிம் வாலிபர்கள் கலியாணம் பண்ணக்கூடிய கன்னிகைகளைப் பகிஷ்காரம் செய்வதென்று தீர்மானித் திருக்கிருர்கள். அங்குள்ள வழக்கம் மனிதர்கள் தங்களுக்கான பெண்சாதிகளை விலைக்கு வாங்குவதென்றும், கன்னிகைகளின் தகப்பனுர் பெருந் தொகை கேட்கிருர்களென்றும் சொல்லப்படுகிறது. கலியாண மாகாத வாலிபர்கள் பெண்களின் விலை குறையாவிட்டால் சைபிரிஸிலிருந்து கன்னிகைகளைக் கொண்டுவருவோமென்றும் தெரிவித்துள்ளார்கள். அநேக வாலிபர்கள் அப்படியே செய்தும்விட்டார்கள்.

---

## கலா நிலயம் முன்னைய வால்யூம்கள்.

**1928, 1930, 1931, 1932, 1933 வருடத்திய வால்யூம்கள் வேண்டுவோர் உடனே பெற்றுக் கொள்வது நலம்.**

**வால்யூம் ஒவ்வொன்றின் விலை:—பைண்ட் செய்யாதது. ரூ. 7-7-0 ஆப் லெதர் கில்ட் பைண்ட் செய்தது. ரூ 9-0-0. தபால் அல்லது ரயில் கட்டணம் வேறு.**



## கலாநிலயச் சொல்லூடாட்டம் 3.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | 2 | ■ | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | 8 | | ■ | 9 | | | |
| | ■ | 10 | | | 11 | | ■ | 12 | |
| 13 | 14 | | ■ | 15 | | ■ | 16 | | |
| ■ | | ■ | 17 | | | 18 | | | ■ |
| 19 | | 20 | | ■ | 21 | | | ■ | 22 |
| | ■ | 23 | | 24 | | ■ | 25 | 26 | |
| 27 | 28 | | ■ | | ■ | 29 | | | ■ |
| ■ | | ■ | 30 | | | | ■ | 31 | |
| 32 | | | | | ■ | 33 | | | ■ |

இடம்—வலம்

1. பூரணசந்திரன்.
3. ஓர் திதி
5. கள்.
7. இடுப்பு.
9. சஞ்சலப்பட்டு.
10. நெருப்பில் வெந்து போதல்.
12. யானை.
13. பெண்.
15. ஸரஸ்வதி
16. குபேரன்பட்டினம்.
17. வியாபாரம்.
19. இல்லாள்.
21. கலிப்பாவின் முதல் உறுப்பு.
23. நீக்குதல்.
25. ஓர் பாத்திரம்
27. இன்பம்.
29. நீராம்பல்.
30. கடவுள்.
31. களிறு.
32. சபை.
33. செடிகள் அடர்ந்த தூறு.

மேல்—கீழ்

1. வடிவம்.
2. விலைக்குப்பெறுதல்
3. கொடுப்பார்.
4. அதிகமாதல்.
5. சுபம்.
6. சித்திரம்.
7. கூட்டம்.
8. ஆசிரியன்.
11. குறைத்தல்.
14. ஓர் நதி.
16. கூப்பிடுதல்.
17. உலக்கைப் பாட்டு.
18. கொடுக்க.
19. மேகம்.
20. வேள்வி.
22. சிரசு.
24. பொன்.
26. பலசாலிகள்.
28. கை.
29. காதல்.
30. அனேக.

**கடைசிநாள்:—1934 வது வருடம், செப்டம்பர் மாதம், 27-ஆம் தேதி.**

பரிசு:— கலாநிலயம். 1928, 1930, 1931, 1932, 1933, ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப்லெதர் - கில்ட் பைண்ட் வால்யூம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கோள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி1934ஹு செப்டம்பர் மீ 27உக்குள்எம்மிடம் சேரும்படி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனேடு நாலணுவுக்குக் காலணுத் தபால் தலைகள் (பதினறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணு பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்குமட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4 இவ்வண்ணம் எதனில் தொடங்கினுலும் அவ்வவ்முறை பரிசுபெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப்போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்தவருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை மானேஜர், கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை.

என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

### சொல்லூடாட்டம் 2க்கு.

நேரிய விடை யனுப்பியவர்:—ஸ்ரீமான்கள், R. தியாகராஜன், K. வேலுப் பிள்ளை, S. சிதம்பரம் பிள்ளை, S. கர்தையா, V. மீனுக்ஷிசுந்தரம் ஐயர், A,M.P.A.M. முருகப்பசெட்டியார், V. இராஜாராமன், N. K. நீலகண்டன், K. குஞ்சரம், T. L. இராமசுவாமி ஐயர், A. P. L. ஷண்முகம் செட்டியார், M. கலியாணசுந்தரம், S. S. நரஸிம்மம், N. ஜகநாதன், V. R. சாரங்கபாணி, V. N. அழகர்சாமி நாயுடு, M. சுப்ரமணியன், P. S. ஷண்முகவடிவு.

பரிசு பெற்றவர்:— S. கர்தையா, (பேராதனை)

திருத்தம்:—மேல்—கீழ். 15. செல்வமுள்ள. இடம் வலம் 28 - களபம். மேல்கீழ் 3-தீர்த்தல். இடம் வலம் 3—திங்கு.

---

**கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப் பெற்வை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.**

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.

m241,N24EN
N34:2.28
199173

KALANILAYAM
REG. NO. M. 2324.

எல்லாவிதமான இன்ஷூரன்ஸ்களுக்கும்

**ஜூபிட்டர் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி**

லிமிடெட்

யோசனை கேளுங்கள்.

நெருப்பு, கப்பல், மோட்டார், தபால், ரயில்வே இவைகளுக்கும் மரணத்திறகும் இன்ஷியூரன்ஸ் எடுத்துக்கொள்ளுகிறோம்.

சென்னையிலேயே பாலிஸிகள் கோடுக்கப்பட்டுப் பணங்களும் பட்டுவாடா செய்யப்படும்.

1919-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டுச் சென்னையில் 1920-ம் வருஷம் முதல் வேலைசெய்து வருகிறது. பெரிய பாங்கிகளாலும் வியாபார ஸ்தாபனங்களாலும் மதிக்கப்பட்டது.

**பூராவும் நம்பகமானது**

(பெரிய முதலும் நிதியும் உடையது)

நேரிலாவது அல்லது நெ. 2547-க்கு போனிலாவது பேசவும்.

**நாராயணதாஸ் கிர்தார்தாஸ்**

(ஸ்தல மானேஜர்கள்)

நெ. 99, அரமனைக்காரன் தெரு,
சென்னை.

**யுனைடெட் இந்தியா**
**லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.**

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ளு ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷூயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.

யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.

யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.

| | | |
|---|---|---|
| ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. | அல்லது | இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள் |

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

உயர்ந்த ஜாதி

**பழமரக் கன்றுகள்**

முறைப்படி வளர்க்கப்படுவன

**பழமரங்கள் வைத்து வளர்ப்பதால் இலாபம்.**

அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும். ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.

விலையும் நயம்!

ஜாதியில் உயர்ந்தது! ஒருபோதும் கேடாதது!!

**தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது தேசாயின் பழச்செடி தினுசுகளே.**

உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.

நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார். தேவகோட்டை ராம்நகர் எக்ஸ்டென்ஷனில் பழத் தோட்டங்களும் அலங்கார நந்தவனங்களும் அமைத்துத்தரவும் மேற்பார்வை செய்யவும் ஏற்றுக்கொள்வார்.

**D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.**

தேசாய் அண்டு கோ.,
17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பங்களூர்.

**DESAI & Co.,** 17, Cross Road
Malleswaram
BANGALORE

**NATIONAL**
**INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**

**1933 Results.**

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

**Specialities.**

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

**Consult**
**NATIONAL FIRE**
**AND**
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
Head Office:—
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**
for Fire, Motor & Accident policies.

**A sound Company.**

Please apply for particulars to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

**இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்**

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 58 வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**

இனும்! இனும்!!

**"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"**

இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
**26 பிராட்வே, மதராஸ்.**